வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 04 | 06.05.2023 சனிக்கிழமை | இதழ் : 148 | பக்கங்கள் : 16

# தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றுசேர்ந்து தீர்வை வலியுறுத்தவேண்டிய தருணம் இது!



## இணைந்து பயணிக்க அழைக்கிறார் கருணாகரம் எம்.பி.

மட்டக்களப்பு, மே. 06

தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து தமிழ் மக்களுக்கான தீர்வை வலியுறுத்தவேண்டிய காலம் என்பதனால் அனைத்துத் தமிழ்க் கட்சிகளும்ம் ஒன்றுபடவேண்டும் என அழைப்பு விடுத்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம்.

15

## மழை நீடிக்கும்

கொழும்பு, மே. 06

இலங்கைக்கு அருகில் வங்காள விரிகுடாவில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலத்தின் தாக்கம் காரணமாக மேற்கு உட்பட நான்கு மாகாணங்களில் எதிர்வரும் 3 தினங்கள் மழையுடனான வானிலை அதிகரிக்கலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வங்காள விரிகுடாவைச் சூழவுள்ள பகுதிகளில் குறைந்த

15

## ஜனாதிபதி நாடு திரும்பியதும் புதிய ஆளுநர்கள் நியமனம்?

கொழும்பு, மே. 06

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பிரித்தானிய விஜயத்தை நிறைவு செய்து நாடு திரும்பிய பின்னர், புதிய ஆளுநர்கள் நியமிக்கப்பட உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய ஆளுநர்களுக்கு இது தொடர்பான அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதாக, அரசாங்க உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து வினவிய போது ஆளுநர்களின் தரப்புகள் இந்த விடயத்தை உறுதிப்படுத்தின.

வடக்கு மாகாண ஆளுநராக, ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சர் ஜோன் அமரதுங்க நியமிக்கப்பட உள்ளார் எனக் கடந்த நாட்களில்

15

## கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் தையிட்டி விகாரையில் வெசாக்!

### போராட்டமும் தொடர்கின்றது

யாழ்ப்பாணம், மே. 06

வலிகாமம் வடக்கு தையிட்டி விகாரையில் வெசாக் தினத்தை முன்னிட்டு வெசாக் கூடுகள் கட்டப்பட்டு பௌத்த கொடிகள் பறக்கவிடப்பட்டு பௌத்த பாடல்கள் இசைக்கப்பட்டு வருகின்றன.

குறித்த ஏற்பாடுகளை இராணுவத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

அதேவேளை தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள விகாரையை அகற்றுமாறு வலியுறுத்தி நேற்று வெசாக் தினத்தில் போராட்டம் இடம்பெற்றது.

தையிட்டி எமது நிலம், புத்த விகாரை வேண்டாம், இராணுவமே வெளியேறு

15



## நிதி ஸ்திரத்தன்மையை பாதுகாக்கவேண்டும்!

### சர்வதேச நாணய நிதியம் இலங்கையிடம் வலியுறுத்து

கொழும்பு, மே 06

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பின் போது, நாட்டின் நிதி ஸ்திரத் தன்மை பாதுகாக் கப்படவேண்டும் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

தென் கொரியாவில் நடைபெறும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் வருடாந்த கூட்டத் தொடரின்போது, ஊடக சந்திப்பில் கலந்துகொண்ட சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய பசுபிக் திணைக்கள பணிப்பாளர், கிருஷ்ணா சிறிநிவாசன் இது தொடர்பில் தெளிவுபடுத்தினார்.

இலங்கையில் அதிகரித்திருந்த பணவீக்கம்

15

## பொதுநலவாய தலைவர்கள் மாநாட்டில் ஜனாதிபதி ரணில்!

லண்டன், மே. 06

இங்கிலாந்தில், பொதுநலவாய செயலகத்தில் இடம்பெறும் பொதுநலவாய தலைவர்கள் மாநாட்டில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்கேற்றுள்ளார்.

இன்று இடம்பெறவுள்ள மன்னர் மூன்றாம் சார்ள்ஸின் முடிசூட்டு விழாவில் பங்கேற்பதற்காக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இங்கிலாந்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

இந்தநிலையில், நேற்று இடம்பெற்ற

15

## நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் சீரற்ற காலநிலையினால் பாதிப்பு

கொழும்பு, மே. 06

நாட்டில் கடந்த சில தினங்களாக நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக பல மாவட்டங்களைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

சீரற்ற காலநிலை காரணமாக பதுளை , திருகோணமலை, இரத்தினபுரி, கேகாலை, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, புத்தளம் மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களே அதிகளவில் பாதிக்கபட்டுள்ளன.

15

## ஜனாதிபதி வேட்பாளராக பஸில் களமிறக்கப்படலாம்

### கூறுகின்றார் சாகர காரியவசம்

கொழும்பு, மே. 06

முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்கப்படலாம் என பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர், “பொதுஜன பெரமுனவுக்கு மக்களாணை இல்லை என்ற தவறான கருத்தை மே தினக் கூட்டத்துடன் முடிவுக்கு கொண்டு வந்துள்ளோம்.

பெரும்பாலான மக்கள் பொதுஜன பெரமுனவுக்கும்,

15

## மகிந்த குடும்பத்தின் ஊழல்களை உடனடியாக விசாரிக்கவேண்டும்!



### செல்வம் எம்.பி. வலியுறுத்து

யாழ்ப்பாணம், மே06

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஊழல்கள் உடனடியாக விசாரிக்கப்படவேண்டும் என்பதுடன் ஊழல் பணம் அனைத்தும் மக்களுடைய தேவைகளுக்கு பயன்படுத் தப்படவேண்டும் என தமிழ்த் தேசியக் கூட் டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

நேற்று ரெலோ

15

# இப்படியும் நடக்கிறது...!

ஓயாத அலைகள் தாக்குதல் விடுதலைப் புலிகளின் வரலாற்றில் ஒரு முக்கிய மைல்கல். முல்லைத்தீவு இராணுவ முகாம் முற்றாக தாக்கி அழிக்கப்பட்ட தாக்குதல் அது.

அதற்குப் பின்னர், சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அப்போது ஜனாதிபதியாக இருந்த காலம். ஜெயசிக்குறு என்ற பெயரில் இலங்கை இராணுவம் பெரும் தாக்குதலை தொடங்கி தொடர்ந்து முன்னேறிக் கொண்டிருந்தது.

ஒட்டுசுட்டான் வரை இலங்கை இராணுவம் முன்னேறியிருந்தபோது அந்த ஜெயசிக்குறுவை தாக்கி அழிக்கும் யுத்தத்தை புலிகள் தொடங்கினார்கள். கருணா அம்மான் தலைமையில் நடத்தப்பட்ட ஜெயசிக்குறு எதிர்ச்சமர் பற்றி ஒரு தடவை கருணா தகவல் சொன்னது இன்றும் ஞாபகம்.

மழைபெய்வதுபோல, ஷெல் தாக்குதலை நடத்தியவாறு ஜெயசிக்குறு முன்னேறியபோது அவர்களை உள்ளே வரவிட்டு சுற்றிவளைத்து புலிகள் எதிர்த்தாக்குதலை நடத்தி அவர்களை ஓமந்தை வரை பின்வாங்கச் செய்தனர். இவ்வாறு பின்வாங்கச் செய்த ஓயாத அலைகள் இரண்டில் அனைத்துத் தளபதிகளும் பங்காற்றியிருந்தனர்.

இதற்குப் பின்னர் முள்ளிவாய்க்காலில் இறுதிக்கட்ட யுத்தம் நடந்து கொண்டிருந்தபோது, கடைசி சில நாட்களுக்கு முன்னர் கனடாவுக்கு பயணம் செய்திருந்த யாழ்ப்பாண பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவர், புலிகள் வளைத்து அடிப்பதற்காக வியூகம் வகுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தோல்வி அடையப்போவதில்லை என்று பலத்த கரகோஷத்துக்கு மத்தியில் தெரிவித்திருந்தார்.

ஜெயசிக்குறு தாக்குதலை புலிகள் முறியடித்ததுபோல இதனையும் முறியடிப்பார்கள் என்று அவர் நம்பியிருந்தாரோ தெரியவில்லை.

இந்த விடயங்களை இப்போது எதற்கு எழுதுகிறீர்கள் என்று நீங்கள் கேட்பது நியாயமானதுதான்.

சில வருடங்களுக்கு முன்னர், சங்கிலியன் பூங்காவில் நடைபெற்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேர்தல் பிரசார கூட்டம் ஒன்றில் பேசிய சட்டத்தரணி சுகாஷ், “பிரபாகரனுக்குப்பிறகு கஜேந்திரகுமார் பொன்னம்பலம்தான் தேசியத் தலைவர்”, என்று அறிவித்தது பலருக்கும் ஞாபகமிருக்கலாம்.

அண்மையில், கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் அன்னை பூபதி, தியாகதீபம் திலீபன் மற்றும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் போன்ற நிகழ்வுகளை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கைப்பற்ற வேண்டும் என்று கூறியிருந்ததும் உங்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

இதுகுறித்து தனது கட்டுரை ஒன்றில் எழுதியிருந்த ஆய்வாளர் நிலாந்தன், ‘புலிகள் இயக்கத்தின் நினைவு நாட்களை அனுஷ்டிப்பதற்கு தனக்குத்தான் அதிகம் உரித்தும் தகுதியும் உண்டு என்று முன்னணி கருதுகின்றது. அதன்மூலம் புலிகள் இயக்கத்தின் விசுவாசமான தொடர்ச்சியாகவும் அக்கட்சி தன்னை காட்டிக் கொள்ள விளைகின்றது. ஆனால், அதை அவர்கள் தமது செயல்பாட்டில் நிரூபிக்க வேண்டும்.’ என்று எழுதியிருந்தார்.

அதனைப் படித்துவிட்டுத்தான் முன்னணியும் இப்போது அப்படி நடந்து கொள்கின்றதோ தெரியவில்லை. தையிட்டியில் கடந்த இரண்டாயிரத்து பத்தொன்பதாம் ஆண்டு அப்போது ஆளுநராக இருந்த றெஜினோல்ட் கூரே விகாரைக்கான அடிக்கல்லை நாட்டினார். அதுபற்றிய செய்திகளும் ஊடகங்களில் வெளிவந்திருந்தது.

இதேவேளை, வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் அந்த விகாரை தனியார் காணியில் கட்டப்படுவதாகவும் அதனை தடுத்து நிறுத்துமாறும் கோரும் தீர்மானம் ஒன்றையும் நிறைவேற்றியிருந்தது.

அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றிய பிரதேச சபையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஆறு உறுப்பினர்களும் இருக்கின்றனர்.

ஆக, அத்திபாரமிடப்பட்டு கடந்த நான்கு வருடங்களாக கட்டுமானம் நடைபெற்று அதுவும் நூறு அடி உயரத்துக்கு கட்டுமானம் கட்டப்படும்வரை இருந்துவிட்டு முழுப்பணியும் முடிந்து கலசம் வைக்கப்பட்ட பின்னர் முன்னணியினர் அந்தப் பகுதியில் பேராட்டத்தை தொடங்கியிருக்கின்றனர்.

புலிகள் ஜெயசிக்குறுவில் உள்ளே விட்டு விட்டு அடித்ததுபோல தாங்களும் செய்தால் தான் தங்களையும் புலிகளின் தொடர்ச்சியாக மக்கள் கருதுவார்கள் என்று நினைத்தார்களோ தெரியவில்லை.

சரி, அவர்கள்தான் இதற்காக இவ்வளவு நாட்களும் பொறுத்திருந்துவிட்டு போராட்டம் நடாத்துகிறார்கள் என்றால், அவர்களுக்கு ஆதரவாக தமிழரசு மற்றும் கூட்டமைப்பு எம்.பிக்களும் அந்தப் போராட்டத்துக்கு ஆதரவாக மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்தை பகிஷ்கரிக்கிறார்கள். அவர்களோடு அங்கஜனும் வேறு சேர்ந்து கொள்கின்றார்.

நல்லாட்சி காலத்தில் அப்போது கலாசார அமைச்சராக இருந்த சஜித் பிரேமதாஸ வடக்கு, கிழக்கில் ஆயிரம் விகாரைகள் கட்டுவதற்காக நிதி ஒதுக்கியிருந்தார். யாருடைய ஆதரவில் வரவு - செலவுத்திட்டம் பாராளுமன்றல் நிறைவேற்றப்பட்டதோ அந்த வரவு - செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியில் கட்டிமுடிக்கப்பட்ட விகாரைக்கு தாங்களும் எதிர்ப்பு என்று புறப்பட்டிருக்கிறார்கள்.

நல்லாட்சி அரசில் ரணிலை பாதுகாப்பது மாத்திரமே தமது கடமை என்று கருதி செயல்பட்ட சுமந்திரனும் சகாக்களும் மக்களை ‘மு’ என்று நினைப்பது இன்று நேற்று நடப்பதில்லைத்தான்.

ஆனால், இது அதையும்விட கேவலமாக நினைப்பதற்கு ஒப்பானது.!

**- ஊர்க்குருவி**

# புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் இரு விடயங்களில் திருத்தம் தேவை

கொழும்பு, மே. 06

“புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தில் உள்ள ஏற்பாடுகளில் இரு விடயங்கள் தொடர்பில் திருத் தங்கள் அவசியம்.” - என்று சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன கட்சியின் ஊடக சந்திப்பு அக்கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்றது. இதன்போது புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தில் உள்ள இரு ஏற்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. ஒன்று ‘பயங்கரவாதம்’ தொடர்பில் உரிய அர்த்தப்படுத்தல் அவசியம்.

2ஆவது விடயம், தடுப்பு உத்தரவு என்பது பாதுகாப்பு அமைச்சரின் அதிகாரத்துக்கு வெளியில், பொலிஸ் அதிகாரியிடம் செல்வது ஏற்புடைய விடயம் என கட்சி கருதவில்லை. ஏனெனில் சில பொலிஸ் அதிகாரிகளின் செயற்பாடுகள் தொடர்பில் அதிருப்தி உள்ளது. சில வேளை ஒரு அதிகாரி இதனை தவறாக பயன்படுத்தினால் கூட அது ஒட்டுமொத்த சட்டத்தின் பெறுமதியையும் சவாலுக்குட்படுத்தும்.

பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியிடம் அந்த அதிகாரம் இருந்தால், ஜனாதிபதி மக்களுக்கு பொறுப்புகூறவேண்டியவர். ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை மக்கள் நீதிமன்றம் முன் வரவேண்டும்-என்றார். (அ)

# பொது நிதிக்குழுவுக்கு தற்காலிக தலைவர்களை நியமிப்பதற்கு எதிராக சர்வதேசத்தை நாட முடிவு

கொழும்பு, மே. 06

பாராளுமன்ற பொது நிதிக்குழுவின் தலைவர் பதவியை நிரந்தரமாக ஒருவருக்கு வழங்காமல், தற்காலிகமாக ஒருவருக்கு வழங்குவது தொடர்பில் சர்வதேச பாராளுமன்ற சங்கத்திற்கு அறிவிக்கவுள்ளதாக எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷமன் கிரியெல்ல தெரிவித்தார்.

நேற்று முன் தினம் நடைபெற்ற தெரிவுக்குழு கூட்டத்தின்போது, பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ பாராளுமன்ற நிதிக்குழுவின் தற்காலிகத் தலைவராக நியமிக்கப்பட்டதாக எதிர்க்கட்சியின் பிரதம கொறடா கூறினார்.

நாட்டு மக்களின் பணத்தைக் கையாளும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கே வழங்கப்பட்டுள்ளது. மக்களின் நிதியை செலவு செய்வது, வரிவிதிப்பது தொடர்பான தீர்மானத்தை பாராளுமன்றமே எடுக்கின்றது.

நிதியை சரியாக செலவு செய்கின்றார்களா, நாட்டின் இலக்கை அடைந்துகொள்வதற்கு செயற்பட்டார்களா என்பதை அறிந்துகொள்வதும் பாராளுமன்றத்திற்குள்ள பொறுப்பாகும். பாராளுமன்றத்தில் உள்ள தெரிவுக்குழுக்கள் ஊடாகவே அவை இடம் பெறுகின்றன. அதில் பொது நிதிக்குழு முக்கியம் பெறுகின்றது.

ஏனைய பாராளுமன்ற தெரிவுக்குழுக்களைப் போன்று பாராளுமன்ற உறுப்பினர்களே இந்த குழுவின் உறுப்பினர்களாவர்.

அவர்களில் எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் நிதி மற்றும் பொருளாதார விவகாரங்கள் தொடர்பில் போதிய அறிவுள்ள பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அதன் தலைவராக நியமிக்கப்படுவது சம்பிரதாயபூர்வமான விடயமாகும்.

கடந்த ஜனவரி மாதம் 27 ஆம் திகதி பாராளுமன்ற நடவடிக்கைகள் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட போது, பாராளுமன்ற பொது நிதிக் குழுவின் தலைவராக கலாநிதி ஹர்ஷ டி சில்வாவே செயற்பட்டார்.

அதன்போது, பல முக்கிய நிறுவனங்கள் தொடர்பிலான விவகாரங்கள் பொது நிதிக் குழுவிலும் கோப் குழுவிலும் கலந்துரையாடப்பட்ட வண்ணம் இருந்தன.

பாராளுமன்ற நடவடிக்கைகள் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதன் பின்னர் அந்த தெரிவுக்குழுக்கள் கலைந்தன.

எதிர்க்கட்சியின் பலத்த எதிர்ப்பிற்கு மத்தியில் பல சந்தர்ப்பங்களில் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன பொது நிதிக்குழுவின் பதில் தலைவராக நியமிக்கப்பட்டு, பல நிதிச்சட்டங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது.

பின்னர் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினரான மயந்த திசாநாயக்கவின் பெயரை முன்மொழிந்து நிறைவேற்றியதுடன், ஆரம்பத்தில் அந்த பதவியை ஏற்றுக்கொண்ட மயந்த திசாநாயக்க பின்னர் இராஜினாமா செய்தார்.

அதன்படி, எதிர்க்கட்சியிலிருந்து கலாநிதி ஹர்ஷ டி சில்வாவே இதன் தலைவர் பதவிக்கு பிரேரிக்கப்பட்டிருந்த போதிலும் இதுவரை அந்த நியமனம் வழங்கப்படவில்லை.

இந்த சூழ்நிலையிலேயே பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தற்காலிக தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனத்திற்கு குழுவின் உறுப்பினரான சட்டத்தரணி சந்திம வீரக்கொடி கடும் எதிர்ப்பு தெரிவித்தார்.

இதேவேளை, பொது நிதிக்குழுவிற்கு நிலையான தலைவர் ஒருவர் நியமிக்கப்படாமை தொடர்பில் அந்தக் குழுவின் முன்னாள் தலைவர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா ருவிட்டர் பதிவொன்றை இட்டுள்ளார்.

நான்காவது தடவையாகவும் இந்த நியமனம் பிற்போடப்பட்டுள்ளமையானது வெட்கக்கேடான விடயம் என அவர் அதில் குறிப்பிட்டுள்ளார். (அ)

# மகளிர் தின நிகழ்வு யாழில்

யாழ்ப்பாணம், மே. 06

உழைக்கும் மகளிர் அமைப்பு நடத்தும் மகளிர் தின நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்ப்பாண பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

திருமதி மிதிலைச்செல்வி சிறீபத்மநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பில் சிறப்புரை ஆற்றுவார். (அ)

# புதிய திரிபுடனான டெங்கு பரவல் நாட்டில் அதிகரிப்பு

கொழும்பு, மே. 06

டெங்கு பரவல் வேகம் அதிகரித்து வருவதால் புதிய திரிபுடனான டெங்கு நோய் மேலும் அதிகரிக்கும் அபாயம் காணப்படுவதாக, சிறிஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஜீவ வாயு பீடத்தின் பணிப்பாளர் பேராசிரியர் சந்திம ஜீவந்தர தெரிவித்தார்.

இதனைக் கவனத்திற் கொண்டு செயற்படுமாறு மக்கள் பணிக்கப்பட்டுள்ளனர். மேலும், டெங்கு நுளம்பு உற்பத்தியாகும் பகுதிகளை இனங்கண்டு அவற்றை ஒழிப்பதில், மக்கள் அதிக கவனம் செலுத்த வேண்டுமென்றும் அவர் கூறினார்.

டெங்கு நோயிலிருந்து சிறுவர்களைப் பாதுகாப்பது தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளதாக அறிவுறுத்தியுள்ள அவர், ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் டெங்கு புதிய திரிபு தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

டெங்கு நோய் தொடர்பில் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொடுப்பது முக்கியமாகுமென்றும் அவர் பரிந்துரை செய்தார்.

(அ)

Eelanadu
06.05.2023 சனிக்கிழமை
சோபகிருது வருடம், சித்திரை 23

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# சுயநிர்ணய உரிமை என்றால்?

ரணில் விக்கிரமசிங்க தேசிய இனப்பிரச்னைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் பேசிவருகின்றார். அவர் எதனை தீர்வென்று கூறுகின்றார் என்பதில் தெளிவில்லை. ஆனால் ஒற்றையாட்சிக்குள்தான் தீர்வென்று கூறுகின்றார். ஒற்றையாட்சிக்குள் உச்சபட்டசமான அதிகாரப் பகிர்வை கொண்டிருக்கும் நாடுகளுமுண்டுதான். ஆனால் இது தொடர்பில் பேசித்தான் இறுதி முடிவெடுக்கவேண்டும். முதலில், பேசுவதற்கான சூழல் இருக்கவேண்டும். அதனை ரணில் ஏற்படுத்தவேண்டும்.

ரணில் தமிழ்க் கட்சிகளுடன் பேசினார் - மேலும் பேசப் போவதாக கூறுகின்றார். இலங்கையின் வரலாற்று படிப்பினை வேறு. அதாவது, தமிழ் தலைவர்களுடன் பேசுவதற்கு முன்னர், ரணில் தென்னிலங்கை அரசியல் தரப்புக்களுடன் பேசவேண்டும். பௌத்த மதபீடங்களுடன் பேச வேண்டும். ஆனால் வெறுமனே தமிழ்க் கட்சிகளுடன் மட்டும் பேசிவிட்டு, விடயத்தை முன்னெடுக்க முற்படும் போது, சிங்கள பக்கத்திலிருந்து எதிர்ப்புக்கள் கிளம்பும். இதுதான் இதுவரையில் நடந்திருக்கின்றது.

இது ஒரு புறம் என்றால், அடுத்த பக்கம், தமிழர்கள் எதைக் கோருவதென்பது. சில தினங்களுக்கு முன்னர், தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்கினேஸ்வரன், தேசிய இனப்பிரச்னையானது, சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில்தான் தீர்க்கப்பட வேண்டுமென்று கூறியிருந்தார். விக்கினேஸ்வரனுக்கு சுயநிர்ணய உரிமை தொடாபில் எவ்வாறான புரிதல் இருக்கின்றதென்று தெரியவில்லை. ஏனெனில் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் பேசுவது தமிழ்ச் சூழலுக்கு புதிதல்ல. 90களில், விடுதலைப் புலிகள் தவிர்ந்த ஏனைய பிரதான இயங்கங்கள் அயுத விடுதலைப் போராட்டத்தை கைவிட்டு, ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்துகொண்டபோது, அவர்களது கோரிக்கை சுயநிர்ணயமாகவே இருந்தது.

இதன் மூலம் தாங்கள் தனிநாட்டுக் கோரிக்கையை முற்றிலுமாக கைவிடவில்லையென்னும் வாதத்தை முன்வைக்க முற்பட்டனர். ஆனால் அவ்வாறானதொரு தீர்வை அடைவதற்கான முயற்சியில் அவர்களால் சிறிய முன்னேற்றத்தைக்கூட காண்பிக்க முடியவில்லை. இப்போது விக்கினேஸ்வரன், ஒரு பாராளுமன்ற உறுப்புரிமையை வைத்துக் கொண்டு, சுயநிர்ணயம் பற்றி பேசுகின்றார். மறுபுறும், இரண்டு பாராளுமன்ற உறுப்புரிமையை வைத்துக் கொண்டு, ஒரு நாடு இரண்டு தேசங்கள் - என்று இன்னொரு கதையை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறிவருகின்றார். ஆனால் தாங்கள் கூறுகின்ற விடயத்தை, அடைவதற்கு கடந்த 14 வருடங்களாக எவ்வாறான அர்ப்பணிப்புக்களை, தியாயங்களை இவர்கள் செய்திருக்கின்றனர்? வெறுமனே சில சொற்களை உச்சரித்துக்கொண்டிருப்பதுதான், இவர்களின் அரசியலென்றால் - இதனை ஒரு அரசு சாரா நிறுவனம், இவர்களை விடவும் சிறப்பாக முன்னெடுக்கலாமல்லவா!

விடுதலைப் புலிகள் சமாதான உடன்பாட்டுக்குள் பரவேசித்த போது, ‘உள்ளக சுயநிர்ணயம்’ - என்னும் சொல்லையே பயன்படுத்தியிருந்தனர். ஏன்? இராணுவ பலத்தோடிருந்த, விடுதலைப் புலிகள் மிகவும் சாதாரணமாக சுயநிர்ணயத்தை உச்சரித்திருக்கலாமல்லவா - ஏன் அவர்கள் அதனைச் செய்யவில்லை? ஏனெனில் சுயநிர்ணய உரிமையென்பது, அடிப்படையில் பிரிந்து செல்வதுதன் தொடர்பானது. பிரிந்து செல்வது கட்டாயமானதல்ல - ஆனால், தொடர்ந்தும் இணைந்திருக்க விரும்பமில்லையயென்றால் பிரிந்து செல்ல முடியும். அதற்கான அங்கீகாரம்தான் சுயநிர்ணய உரிமை. இதனால்தான், லெனின், இதனை விவாகரத்து உரிமை போன்றதென்று கூறினார்.

இந்த பின்புலத்தில் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்னையை தீர்க்கவேண்டுமென்று வாதிட்டால், அதன் பொருள், பிரிந்து செல்வதற்கான உரிமையுடன் கூடிய தீர்வை எதிர்பார்க்கின்றனர் என்பதாகும். விக்கினேஸ்வரன் போன்றவர்கள் விடயங்களை முன்வைக்கும்போது, அதன் ஆழ, அகலங்களை புரிந்துகொண்டு முன்வைக்க வேண்டும். இல்லாவிட்டால், இவ்வாறான சொற்களின் வழியாக அரசியல் பேசுகின்ற போது, அது தென்னிலங்கை அடிப்படைவாதிகள், நிலைமைகளை மேலும் குழப்புவதற்கே பயன்படும். சுயநிர்ணயம்தான், விக்னேஸ்வரனின் இலக்கென்றால், அதற்கான அர்ப்பணிப்பை, தியாகத்தை விக்னேஸ்வரன் போன்றவர்கள் நிரூபிக்கவேண்டும்.



வல்வெட்டித் துறை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தீர்த்த உற்சவம் நேற்று இடம் பெற்றது. பெரும் திரளான பக்தர்கள் இதில் பங்கேற்றனர். (அ-2)

# போதைப்பொருள் கடத்தலின் பின்னணியில் சுகாதார அமைச்சரும் செயலரும் உள்ளனர்!

## புபுது ஜயகொட குற்றச்சாட்டு

கொழும்பு, மே. 06

போதைப்பொருள் கடத்தலின் பின்னணியில் சுகாதார அமைச்சரும் செயலாளரும் நேரடியாக செயற்படுவதாக முன்னிலை சோசலிச கட்சியின் செயலாளர் புபுது ஜயகொட தெரிவித்துள்ளார் .

குறைந்த விலையில் மருந்துகளைக் கொள்வனவு செய்யக்கூடிய நிறுவனங்கள் உள்ள நிலையில்இ ஏனைய நிறுவனங்களிடமிருந்து அதிக விலைக்கு மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு சுகாதார செயலாளர் அமைச்சரவை பத்திரத்தை தயாரித்துள்ளதாகவும் செயலாளர் குறிப்பிட்டார்.

நுகேகொடையில் உள்ள அவரது கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசியல்வாதிகளின் அழுத்தத்தின் பேரில் இவ்வாறான அமைச்சரவைப் பத்திரங்கள் தயாரிக்கப்பட்டால், மற்றவர்களின் தாளத்துக்கு நடனமாடி பிரச்னைகளில் சிக்கவேண்டாம் எனவும் சுகாதார அமைச்சின் செயலாளரை அவர் எச்சரித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அண்மையில் இந்திய நிறுவனம் ஒன்றின் ஊடாக இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட கண் தொற்றுக்கு பயன்படுத்தப்படும் பல மருந்துகளில் குறைபாடுகள் காணப்படுவதாகவும், அவற்றைப் பயன்படுத்திய பின்னர் பல ஒவ்வாமைகளை அடைந்து பார்வையற்ற ஒரு நோயாளி இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண் தொற்றுக்கு பயன்படுத்தப்படும் இந்த மருந்து போத்தல்களில் கிருமிகள் இருப்பதை அரசு ஆய்வகம் உறுதி செய்துள்ளது. மேலும், நோயாளிகளுக்கு பக்கவிளைவுகள் ஏற்படுவதற்கு முன்னர் இந்த மருந்துகள் ஏன் சரியான பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதில்லை என்பது சிக்கலாக உள்ளது - என்றார்.

(அ)

# வடக்கில் 3 இடங்களில் முதலீட்டு வலயங்கள்!

## அமைச்சரவைப் பத்திரங்கள் விரைவில்

யாழ்ப்பாணம், மே. 06

வடக்கு மாகாணத்தில் மூன்று இடங்களில் முதலீட்டு வலயங்கள் அமைப்பதற்கு இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், அதற்குரிய அமைச்சரவைப் பத்திரங்கள் விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்று முன் தினம் இடம்பெற்றது. இதன்போது இலங்கை முதலீட்டுச் சபையின் பிரதிநிதியால் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

“யாழ்ப்பாணம் மாவட்டத்தில் காங்கேசன் துறையில் சிமெந்து தொழிற்சாலை அமைந்துள்ள இடத்தை நேரில் சென்று பார்வையிட்டுள்ளோம். அங்கே முதலீட்டு வலயம் அமைக்க உத்தேசித்துள்ளோம். கிளிநொச்சியில் இரசாயன தொழிற்சாலை அமைந்துள்ள இடத்திலும், மாங்குளத்தில் 400 ஏக்கரிலும் முதலீட்டு வலயங்கள் அமைக்க உத்தேசித்துள்ளோம்” - என்று முதலீட்டுச் சபை பிரதிநிதி குறிப்பிட்டார்.

(அ)

# நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகள் மீது தாக்குதல்

கொழும்பு, மே. 06

நாரம்மலவில் நுகர்வோர் விவகார அதிகார சபை அதிகாரிகள் மீது தாக்குதல் மேற்கொண்ட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த நால்வரும் அதே பகுதியை சேர்ந்தவர்கள் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

சந்கேநபர்கள் மூவர் நேற்று குளியாப்பிட்டிய நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதுடன், மற்றைய சந்தேகநபர், பொலிஸ் பாதுகாப்பின் கீழ் குளியாப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை நாரம்மலையிலுள்ள நிறுவனமொன்றில், முட்டைகளைப் பதுக்கி வைத்துள்ளதாக கிடைத்த தகவலுக்கமைய, தமது அதிகாரிகள் குழுவொன்று அப்பகுதி யில் பரிசோனைக்கு சென்ற போதே இந்த தாக்குதல் இடம்பெற்றதாக நுகர்வோர் விவகார அதிகார சபை குறிப்பிட்டது.

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



மே - 06 சனிக்கிழமை
சோபகிருது வருடம் - சித்திரை 23
நல்ல நேரம் : 07.30 - 09.30
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : பிரதமை




**மேடம்**
உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். வியாபாரத்தில் புது சலுகைகளை அறிவிப்பீர்கள். பெரிய பொறுப்புகள் தேடி வரும். எதிர்பாராத நன்மைகள் உண்டாகும் நாள்.

**இடபம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். வியாபாரத்தில் சில மாற்றங்கள் செய்வீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். தொட்டது துலங்கும் நாள்.

**மிதுனம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். அலுவலகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். கனவு நனவாகும் நாள்.

**கடகம்**
எதிர்ப்புகள் அடங்கும். நீண்ட நாட்களாக தள்ளிப் போன காரியங்கள் முடியும். தொழிலில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**சிம்மம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக்கொள்வீர்கள். உங்கள் கை ஓங்கும். தைரியம் கூடும் நாள்.

**கன்னி**
குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல் குழப்பங்கள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் சிலர் உங்களை சீண்டிப்பார்ப்பார்கள். வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவது நல்லது. சக ஊழியர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள்.

**விருட்சிகம்**
உணர்ச்சி வேகத்தில் அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். வியாபாரத்தில் புது முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களை அனுசரித்துப் போங்கள். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**தனுசு**
ராஜதந்திரமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள். இனிமையான நாள்.

**மகரம்**
தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். உங்களை நம்பி சில முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். சாதிக்கும் நாள்.

**கும்பம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகி மகிழ்ச்சி அதிகரிக்கும். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். வியாபாரத்தில் இழப்புகளை சரி செய்வீர்கள். உற்சாகமான நாள்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில காரியங்களை போராடி முடிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களால் டென்ஷன் அதிகரிக்கும். அதிகாரிகளுடன் அளவாக பழகுங்கள். விழிப்புணர்வு நாள்.

# பறக்கும் ரயில் கட்டணம் உயர்கிறது

*சென்னை, மே. 06*

சென்னை கடற்கரை-வேளச்சேரி இடையே பறக்கும் ரயில் சேவை இயங்கி வருகிறது. இந்த வழித்தடத்தில் தினமும் 150 பறக்கும் ரெயில்கள் இயக்கப்படுகின்றன. தற்போது வேளச்சேரியையும், பரங்கிமலையையும் இணைக்கும் பறக்கும் ரயில் திட்டம் பணிகள் நடைபெற்று வருகிறது. சென்னை கடற்கரை-வேளச்சேரி இடையே 19 ரயில் நிலையங்கள் உள்ளன. பறக்கும் ரயிலில் பயணம் செய்ய குறைந்த அளவிலேயே கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பறக்கும் ரயிலில் பயணிக்க குறைந்தபட்ச கட்டணம் 5 ரூபாய் மட்டுமே ஆகும். இந்த நிலையில் பறக்கும் ரெயில் கடுமையான நட்டத்தை சந்தித்து வருகிறது. கடந்த ஆண்டு மட்டும் ரூ.84.10 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது. தெற்கு ரயில்வே பறக்கும் ரெயில் சேவைக்கு ஆண்டுதோறும் ரூ.100 கோடிக்கு மேல் செலவிடுகிறது. இந்த பணம் ரயில் இயக்கம், பராமரிப்பு மற்றும் ஊழியர்களின் சம்பளம் ஆகியவற்றுக்காக செலவிடப்படுகிறது. பறக்கும் ரெயில் ரிக்கெட் விற்பனை மூலம் தெற்கு ரயில்வேக்கு கடந்த ஆண்டு ரூ.17.25 கோடி மட்டுமே வருமானம் கிடைத்துள்ளது. இந்த நிலையில் பறக்கும் ரயில் சேவையை தெற்கு ரயில்வேயிடம் இருந்து கையகப்படுத்த தமிழக அரசு ஆலோசித்து வருகிறது.

எனவே விரைவில் பறக்கும் ரயில் சேவைகள் அனைத்தும் தமிழக அரசுக்கு மாறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது இழப்பு ஏற்பட்டு வருவதால் ரயில் நிலையங்களை பராமரிப்பதில் சிரமம் ஏற்படுகிறது. எனவே பறக்கும் ரயில் கட்டணம் உயருகிறது. குறைந்த பட்ச கட்டணம் 5 ரூபாயில் இருந்து 10 ரூபாயாக உயர்த்தி நிர்ணயிக்கப்பட உள்ளது. மெட்ரோ ரயில் சேவையை கையகப்படுத்தியப் பிறகு பறக்கும் ரெயில் பயணிகளுக்கு சிறந்த வசதிகளை வழங்க வேண்டும் என்பதே அரசின் நோக்கமாகும். பறக்கும் ரயிலை தமிழக அரசு ஒரே நேரத்தில் கையகப்படுத்தினால் 150 ரயில் பெட்டிகளை வாங்கும். அதன் விலை மட்டும் சுமார் ரூ.140 கோடி ஆகும். மேலும் கையகப்படுத்த நடவடிக்கை அடுத்த 2 அல்லது 3 ஆண்டுகளில் நிகழலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்போது பறக்கும் ரயில் சேவையை கையகப்படுத்த ரூ.500 கோடிக்கு மேல் செலுத்துவது குறித்து அரசு பரிசீலிக்கலாம் என்று தெரிகிறது. முன்னதாக இந்த திட்டம் 2 நிலைகளில் கையகப்படுத்தப்படுவதாக இருந்தது. அதன்படி சென்னை பெரு நகர மேம்பாட்டு ஆணையம் அனைத்து பறக்கும் ரெயில் நிலையங்களையும் வணிக ரீதியாக மேம்படுத்த வேண்டும் என்றும், செயல்பாடு மற்றும் பராமரிப்பை தெற்கு ரயில்வே நிர்வகிக்க வேண்டும் என்றும் திட்டமிடப்பட்டது.

அடுத்த கட்டத்தில் பறக்கும் ரயில் சேவை முழுவதையும் கையகப்படுத்த திட்டமிடப்பட்டது. பறக்கும் ரயில் முதலில் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்துடன் இணைக்கப்பட இருந்தது. ஆனால் அது நிறைவேறவில்லை. சென்னை கடற்கரை மற்றும் பூங்கா ரயில் நிலையங்களுக்கிடையே புதிய வழித் தடத்தை அமைக்க நிலம் கையகப்படுத்துவது தொடர்பாக சிக்கல் எழுந்தது. இதனால் 2018ஆம் ஆண்டு இந்த திட்டத்தை சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் கைவிட்டது குறிப்பிடத்தக்கது.

(அ)

# தமிழகத்தில் ஏழு நாட்களுக்குள் மின் இணைப்பு வழங்க திட்டம்

*சென்னை, மே. 06*

தமிழ்நாடு மின்சார வாரியம் நுகர்வோரின் வசதி மற்றும் அவர்களின் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் புதிய மாற்றங்களை விரைவில் கொண்டு வர உள்ளது. அதன்படி நுகர்வோர்களுக்கு அவர்கள் விண்ணப்பித்த 7 நாட்களில் புதிய மின் இணைப்பு வழங்கவும், வழங்க தாமதமானால் நுகர்வோர் அபராதம் கோரவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. தற்போது ஒருவர் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் புதிய மின் இணைப்பு கேட்டு விண்ணப்பித்தால் 30 நாட்களுக்குள் மின் இணைப்பு வழங்க வேண்டும் என்பது விதியாக உள்ளது. இந்த காலக்கடுவை 7 நாட்களாக குறைக்க தமிழ்நாடு மின்சார வாரிய ஒழுங்குமுறை ஆணையம் திருத்தம் கொண்டு வர முடிவு செய்துள்ளது. இந்த புதிய திருத்தங்களின்படி 48 மணி நேரத்திற்குள் தற்காலிக மின் விநியோகத்தை செயல்படுத்த வேண்டும் என்றும், 7 நாட்களுக்குள் குறைபாடு உள்ள மீற்றர்களை மீண்டும் பொருத்த வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

புதிய இணைப்பு கேட்டு விண்ணப்பித்து ஏழு நாட்களை தாண்டினால் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் விண்ணப்பதாரருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.100 வீதம் அதிகபட்சமாக ரூ.1000 வரை அபராதம் வழங்க வேண்டும் என தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் திருத்தம் கொண்டு வரவுள்ளது.

(அ)

# மத்திய அரசு தமிழக ஆளுநரை கைது செய்திருக்க வேண்டும்!

## முத்தரசன் ஆவேசம்

*சென்னை, மே. 06*

ஆளுநர் ஆர்.என்.ரவி ஏற்றுக் கொண்ட பொறுப்பானது மதிக்கத் தக்க கண்ணியமான ஒரு பொறுப்பு. ஆனால் தொடர்ந்து அந்த பொறுப்புக்கு அவர் களங்கம் ஏற்படுத்தி வருகிறார். அவரை மத்திய அரசு கைது செய்திருக்கவேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் முத்தரசன் தெரிவித்தார்.

அவர் திருச்சியில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

ஆளுநர் ஆர்.என்.ரவி ஏற்றுக் கொண்ட பொறுப்பானது மதிக்கத் தக்க கண்ணியமான ஒரு பொறுப்பு. ஆனால் தொடர்ந்து அந்த பொறுப்புக்கு அவர் களங்கம் ஏற்படுத்தி வருகிறார். சட்டப் பேரவையில் ஆளுநர் உரை என்பது அமைச்சரவையால் தயாரிக்கப்பட்டு அவரது ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு முதல் நாள் இரவு 12 மணிக்கு தான் அச்சடிக்கப்படும். அதனை அப்படியே வாசிக்க வேண்டும் என்பது மரபு. அதில் ஒரு பகுதியை நீக்குவதும், இன்னொரு பகுதியை சேர்ப்பதற்கும் அவருக்கு உரிமை கிடையாது. மேலும் அந்த கொள்கை, திட்டத்தின் மீது கருத்துக்களை சொல்லும் உரிமை என்பது சட்டமன்ற உறுப்பினர்களுக்குதான் இருக்கிறது. உரை பொய்யானது என்று கவர்னர் கூறுவது அபத்தமானது, கண்டனத்திற்குரியது. ஆளுநர் இவ்வாறு பேசுவது அவர் எடுத்துக்கொண்ட உறுதிமொழிக்கு எதிரானது. மத்தியில் ஆளும் பா.ஜ.க. அரசு யோக்கியமான அரசாக இருந்தால் இந்திய அரசியலமைப்பு சட்டத்திற்கு எதிராக பேசும் அவரை இந்த நேரம் கைது செய்திருக்க வேண்டும். ஆனால் யோக்கிய மற்ற அரசாக இருக்கின்ற காரணத்தால் அவரது இஷ்டத்துக்கு கருத்து சொல்கிறார். சனாதனத்தை தான் ஏற்றுக் கொள்வதாக சொல்கிறார். சனாதனம் தான் நாட்டின் சீரழிவுக்கு காரணம். நாங்கள் ரவியை கேட்டுக் கொள்வதெல்லாம் நீங்கள் கவர்னர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு ஆர்.எஸ்.எஸ். தொண்டனாக, பா.ஜ.க. தொண்டனாக இருந்து என்ன வேண்டுமானாலும் உங்கள் விருப்பத்திற்கு பேசலாம். ராஜ்பவனை கமலாலயம் ஆக்க உங்களுக்கு அனுமதி அளிக்க முடியாது. ராஜ்பவன் மாநில அரசின் நிர்வாகத்திற்கு உட்பட்டது. உங்களுக்கு சம்பளத்தை மக்களின் வரிப்பணத்தில் கொட்டிக் கொடுக்கிறார்கள். பிரதமர் மோடியும், உள்துறை மந்திரியும் அவருக்கு ஆதரவாக இருப்பதால் திமிர்த்தனமாக பேசிக்கொண்டிருக்கிறார். தி கேரளா ஸ்டோரி திரைப்படம் உண்மைக்கு புறம்பான மக்களிடையே மோதலை ஏற்படுத்தும் கருத்துக்கள் உள்ள படமாக கேரளா அரசு தெரிவித்துள்ளது. உளவுத்துறையும் கடுமையாக எச்சரித்துள்ளது. மக்களிடையே மோதலை ஏற்படுத்த சிலர் முயற்சிக்கிறார்கள். நாங்கள் ஒற்றுமையை எதிர்பார்க்கின்றோம்-என்றார்.

(அ)

ஈழநாடு





# போலி நாணயத் தாள்களுடன் யாழ்.பல்கலை மாணவன் கைது!

கொழும்பு, மே. 06

பெருமளவு போலி நாணயத் தாள்களுடன் யாழ்.பல்கலைக் கழக மாணவன் மற்றும் ஓட்டோச் சாரதி ஆகியோர் கைதாகியுள்ளனர்.

சந்தேகநபர்கள் பளைப் பகுதியில் கைது செய்யப்பட்டனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

அவர்களிடமிருந்து 250,500 ரூபாய் போலி நாணயத்தாள்களைப் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர். (அ)

# புத்தர் சிலைக்கு அடியிலிருந்து சிசு மீட்பு!

கொழும்பு, மே. 06

வத்தேகம-எல்கடுவ வீதியில் மலியதேவ விஹாரைக்குச் செல்லும் வீதிக்கு அருகில் உள்ள புத்தர் சிலைக்கு அடியில் பிறந்த சிசு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக வத்தேகம பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து குறித்த சிசு வத்தேகம வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

புத்தர் சிலைக்கு அடியில் சிசு ஒன்று காணப்படுவதை அவதானித்த பிரதேசவாசிகள் அதனை எடுத்து வைத்தியசாலைக்கு கொண்டு சென்றதாக பொலிஸார் கூறினர்.

குழந்தை நலமுடன் இருப்பதாக வத்தேகம வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

குழந்தையை பிரசவித்த தாய் குறித்து அறிந்து கொள்ள வத்தேகம பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)



# வெசாக் தினத்தில் யாழில் இராணுவம் அன்னதானம்

யாழ்ப்பாணம், மே. 06

வெசாக் பூரணை தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகரில் அன்னதானம் வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

523ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் இந்த அன்னதான நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் 523ஆவது படைப்பிரிவு கட்டளைத் தளபதி பிரிகேடியர் கே.ஏ.எஸ். கே.சிறிவர்தன, சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பாலித செனவிரத்ன உட்பட பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர். (அ)

# காய்ச்சல் ஏற்பட்டால் உடனடியாக வைத்தியசாலை செல்லவேண்டும்!

## மருத்துவர் சங்கத் தலைவர் அறிவுறுத்து

கொழும்பு, மே. 06

**'கோவிட் தொற்றை இன்புளுவன்ஸா வைரஸ் நோய் நிலைமையிலிருந்து வேறுபடுத்தி கண்டறிய முடியாது. எனவே, தற்போது காய்ச்சல் ஏற்பட்டால் உடனடியாக மருத்துவமனைக்கு செல்லவேண்டியது அத்தியாவசியமாகும்' என இலங்கை மருத்துவர் சங்கத்தின் தலைவர் வைத்தியர் வின்யா எஸ்.ஆரியரத்ன தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மழை காரணமாக டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வருகிறது. இந்த ஆண்டில் இதுவரை 30ஆயிரத்துக்கும் அதிகமான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இதில் 50 சதவீதத்துக்கும் அதிகமானோர் மேல் மாகாணத்தில் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிலேயே காணப்படுகின்றனர். எனவே காய்ச்சல் போன்ற நிலைமைகள் ஏற்படும்போது உடனடியாக மருத்துவர்களை நாடவேண்டியது அவசியமாகும்.

இதேவேளை, கடந்த ஓரிரு வாரங்களாக கோவிட் தொற்றாளர்களும் இனங்காணப்பட்டு வருகின்றனர். ஆசிய நாடுகளான இந்தோனேசியா, வியட்நாம், சிங்கப்பூர் உள்ளிட்ட நாடுகளில் அதிகளவான கோவிட் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டு வருகின்றனர். எனினும், இந்த நிலைமை குறித்து நாம் வீண் அச்சமடையத் தேவையில்லை. எவ்வாறிருப்பினும் கொவிட் காலத்தில் பின்பற்றிய சுகாதார வழிமுறைகளை தொடர்ந்தும் பேணுவதே ஆரோக்கியமானதாகும்.

குறிப்பாக நாட்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்கள் மற்றும் முதியோர் மிக அவதானமாக செயற்பட வேண்டும். இதே போன்று தற்போது எலிக்காய்ச்சல் பரவும் வீதமும் அதிகரித்து வருகிறது. பக்றீரியாவினூடாகவே எலிக்காய்ச்சல் பரவுகின்றது. விலங்குகளின் சிறுநீரிலிருந்து இந்த பக்றீரியாக்கள் பரவுகின்றன. வயல் போன்ற பகுதிகளிலேயே குறித்த பக்றீரியாக்கள் அதிகளவில் பரவிக் காணப்படுகின்றன.

இதனால் ஏற்படக்கூடிய எலிக்காய்ச்சல் தீவிரமடைந்து மரணம் கூட சம்பவிக்கக்கூடும். மார்ச் தொடக்கம் மே மாதம் வரை பெரும்போக நெற்செய்கைக் காலம் என்பதால் விவசாய சமூகத்தினர் அவதானத்துடன் செயற்படவேண்டும். காய்ச்சல், கண் சிவத்தல், தசைவலி, மஞ்சள் நிறத்தில் சிறுநீர் செல்லல் உள்ளிட்ட அறிகுறிகள் தென்பட்டால் தாமதமின்றி மருத்துவர்களை நாட வேண்டும்-என்றார். (அ)

# சீரற்ற காலநிலையால் மத்தளவுக்கு திருப்பி அனுப்பப்பட்ட விமானங்கள்!

கொழும்பு, மே. 06

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கும் இரண்டு விமானங்கள் மத்தள விமான நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் இரவு கட்டுநாயக்க பிரதேசத்தில் கடும் மழை பெய்த நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

அதன்படி, முதல் விமானம் அவுஸ்திரேலியாவின் மெல்போர்னில் இருந்து 15 விமான ஊழியர்களுடன் வந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு 11.35 மணியளவில் மத்தள விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டது.

விமானத்தில் உள்ள பயணிகளும் ஊழியர்களும் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு பஸ் மூலம் அழைத்து வரப்பட்டதாக கூறப்பட்டது.

அதேபோல், மாலைதீவின் மாலேயில் இருந்து வந்த விமானம் ஒன்றும் நேற்று அதிகாலை 12.02 மணியளவில் மத்தள விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டது. (அ)

# 2 பஸ்கள் நேருக்கு நேர் மோதி கோர விபத்து!

## 23 பேர் வைத்தியசாலையில்

கொழும்பு, மே. 06

கஜூகம பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 23 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்த விபத்து நேற்று காலை 7.30 அளவில் இடம்பெற்றதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் காரியாலயம் தெரிவித்தது.

கொழும்பிலிருந்து மூதூர் நோக்கிச் சென்ற தனியார் பஸ் ஒன்றும் கண்டியிலிருந்து நீர்கொழும்பு நோக்கிச் சென்ற இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றும் மோதுண்டு விபத்துக்குள்ளாகின.

இந்த நிலையில் இரு பஸ்களின் சாரதிகள் உள்ளிட்ட 23 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# 9 மாதத்தில் 350 வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேற்றம்!

கொழும்பு, மே. 06

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் முதல் கடந்த ஒன்பது மாதங்களில் சுமார் 350 வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக சுகாதார அமைச்சின் மூன்றாம் நிலை பராமரிப்பு சேவைகள் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் பிரியந்த அத்தபத்து தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

நாட்டில் பணியாற்றுவதற்கு 2,837 விசேட வைத்திய நிபுணர்களும், 23,000 பொது வைத்தியர்களும் தேவைப்படுகின்றனர்.

இந்நிலையில், தற்போது 50 விசேட வைத்திய நிபுணர்கள் மற்றும் 250 வைத்தியர்களும் வெளிநாடு சென்றுள்ளனர்.

நோயாளர் பராமரிப்பு சேவைகளை பேணுவதற்கு இடையூறாக தெரிவிக்காமல், சேவையை விட்டு வெளியேறுமாறு உத்தரவு பிறப்பித்ததன் மூலம் சுமார் 50 வைத்தியர்கள் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங் கொடுத்து நாட்டில் தற்போதும் கடமையாற்றும் வைத்தியர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும் எனவும் அது தொடர்பில் சுகாதார அமைச்சு கலந்துரையாடி வருகிறது-என்றார். (அ)

# ஓய்வுபெற்றுள்ள ஆசிரியர்கள் விடைத்தாள் மதிப்பிடமுடியாது

## ஜோசப் ஸ்டாலின் எதிர்ப்பு

கொழும்பு, மே. 06

ஓய்வுபெற்ற ஆசிரியர்களை, விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளில் இணைத்துக்கொள்வதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள தீர்மானம் சரியானதல்ல என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

விடைத்தாள் மதிப்பீட்டுக்கான கொடுப்பனவு போதாது என கல்வி அமைச்சர் பல சந்தர்ப்பங்களில் குறிப்பிட்டுள்ளார். எனவே, அதனை அதிகரிக்க வேண்டும்.

இல்லாவிட்டால், மேலும் ஆசிரியர்கள் விண்ணப்பிக்க மாட்டார்கள். எனவே, இது வரையில் விண் ணப்பித்தவர்களைக் கொண்டே இந்தப் பணிகளை முன்னெடுக்க வேண்டும்.

ஓய்வுபெற்ற ஆசிரியர்களை இந்தப் பணிகளுக்கு அழைப்பதைத் தவிர்த்து, ஆசிரியர்களை இணைப்பதற்கான நடவடிக்கையை அரசாங்கம் எடுக்க வேண்டும்-என்றார். (அ)



# மன்னாரில் வெசாக் தான உபகாரம்

மன்னார், மே. 06

மன்னார் தலைமைப் பொலிஸ் நிலையம் ஏற்பாடு செய்த வெசாக் போயா தின தான உபகாரம் நேற்றுக் காலை மன்னார் பொலிஸ் நிலையத் துக்கு முன்பாக இடம்பெற்றது.

மன்னார் சமூக பொலிஸ் பிரிவு மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இதன்போது அப்பகுதியால் சென்ற மக்களுக்கு தான உபகாரம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்ப திகாரி உட்பட பலர் கலந்து கொண்டனர். (அ)

# வடக்கில் சீன உதவித் திட்டத்தில் கடற்றொழிலாளர்களுக்கு வீடுகள்

## அமைச்சர் டக்ளஸ் அறிவிப்பு



யாழ்ப்பாணம், மே 06

**வடக்கு மாகாணத்தில் சீனாவின் உதவித் திட்டத்தில் கடற் தொழிலாளர்களுக்கு வீடுகள் வழங்கப்பட உள்ளதாக யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும் கடற் தொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் வியா ழக்கிழமை யாழ். மாவட்ட செய லகத்தில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்தி கலந்துரையாட லின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

வடமாகாண மக்களுக்காக சீன அரசிடம் இருந்து சுமார் 1500 மில்லியன் ரூபாய் கிடைக் கப் பெறவுள்ள நிலையில் குறித்த நிதியுதவியில் அரிசி, கடற்தொழிலாளர்களுக்கு வலை மற்றும் வீடுகள் பெற் றுக் கொடுக்கப்படவுள்ளன.

அது மட்டுமல்லாது ஜப் பான் நாட்டு அரசாங்கத்தினால் சுமார் 1600 மில்லியன் ரூபாய் கிடைக்கப்பெறவுள்ள நிலை யில் அதற்கான வேலை திட்டங்களை தயார் செய்து வரும் நிலையில் ஆசிய அபிவி ருத்தி வாங்கியும் எமக்கு உதவத் தயாராக இருக்கிறது.

ஆகவே நாட்டின் ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க விரை வில் புதுடில்லி செல்ல உள்ள நிலையில் இந்தியாவும் எமக்கு பல மில்லியன் ரூபாய் உதவித் திட்டங்களை வழங்கும் என எதிர்பார்க்கிறோம்-என்றார். (அ)

# நான்கு மாகாணங்களில் மழையுடனான வானிலை

கொழும்பு, மே. 06

இலங்கைக்கு அருகில் வங் காள விரிகுடாவில் உருவாகி யுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலத்தின் தாக்கம் காரணமாக மேற்கு உட்பட நான்கு மாகாணங்களில் நாளை முதல் மற்றும் 9 ஆம் திகதி வரை மழையுடனான வானிலை அதிகரிக்கலாம் என வளிமண்ட லவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வங்காள விரிகுடாவைச் சூழவுள்ள குறைந்த காற்ற முத்தத் தாழ்வுப் பகுதி உருவாகி இலங்கை ஊடாக காற்று கடக் கும் எனவும், இதன் காரணமாக நாட்டின் தென்மேற்குப் பகுதி யில் மழை பெய்யக் கூடும் என வும் வளிமண்டலவியல் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் மெரில் மெண்டிஸ் தெரிவித்தார்.

இதன்படி மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் மழையுட னான வானிலையில் அதிகரிப்பு ஏற்படக்கூடும் என பிரதிப் பணிப்பாளர் கூறினார். (அ)

# வெளிநாட்டு சொத்து கையிருப்பு அதிகரிப்பு

கொழும்பு, மே 06

நாட்டின் உத்தியோகபூர்வ வெளிநாட்டு சொத்துக் கையி ருப்பு மார்ச் மாதத்துடன் ஒப்பி டுகையில் 2.2 வீதம் அதிகரித்து ஏப்ரல் இறுதியில் 2.75 பில்லி யன் அமெரிக்க டொலர்களை எட்டியுள்ளது.

மார்ச் மாதத்தில் வெளி நாட்டு நாணயக் கையிருப்பு 2.69 பில்லியன் அமெரிக்க டொலர் களாக பதிவாகியுள்ளது.

இந்த சொத்து கையிருப்பில் சீன மக்கள் வங்கி பரிவர்த்தனை முறை மூலம் வழங்கிய 1.4 பில் லியன் டொலர்களும் அடங்கு வதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (அ)

# சிவாலயங்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை என்கிறார் அமைச்சர்

கொழும்பு, மே. 06

இலங்கையிலுள்ள பிரசித்தி பெற்ற சிவாலயங்களின் வர லாற்றை ஆராய்ந்து, அந்த ஆலயங்களைத் தொல்பொருள் அடையாளங்களாக பாதுகாப் பதற்கு தீர்மானித்துள்ளதாக புத்தசாசன, சமய மற்றும் கலா சார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித் தார்.

நகுலேஸ்வரம், திருகேதீச் சரம், திருக்கோணேச்சரம், முன்னேஸ்வரம், தொண்டீஸ்வ ரம் (புராதன பெயர் சந்திரசேக ரேஸ்வரம்), ஒட்டுச்சுட்டான் தான்தோன்றிஸ்வரம், கொக்கட் டிச்சோலை தான்தோன்றிஸ் வரம் உள்ளிட்ட சிவாலயங்கள் தொடர்பில் ஆராய எதிர்பார்த் துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இலங்கையிலுள்ள சிவால யங்கள் குறித்து ஆராய்ந்து, அவற்றை தொல்பொருள் அடையாளங்களாக பாதுகாக்க தீர்மானித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இலங்கையிலுள்ள சிவால யங்கள் சர்வதேச ரீதியில் பாது காக்கப்பட வேண்டிய சொத் துக்கள் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

எனினும், நாடு பொருளா தார ரீதியில் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் காரணமாக, சிவாலயங்களை பாதுகாப்பது தொடர்பான திட்டத்தை முன் னெடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்தத் திட்டத்தை முன்னெ டுப்பதற்கு சர்வதேச ரீதியில் செயற்படும் இந்து அமைப்புக் கள், புலம்பெயர் தமிழர்கள் மற்றும் ஆர்வமுள்ளவர்களை வருகை தந்து, தம்முடன் கைக் கோர்க்குமாறு புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல் கள் அமைச்சர் விதுர விக்ரமநா யக்க குறிப்பிட்டார். (அ)

# தொலைபேசியை பறித்த அதிபர் உயிர் மாய்க்க முயன்ற மாணவன்

## வவுனியா பகுதியில் சம்பவம்

வவுனியா, மே 06

வடக்கில், பாடசாலை மாணவனின் தொலைபேசியை அதிபர் பறித்தமையினால் மாணவன் நஞ்சருந்தி தற்கொலை செய்ய முயன்ற நிலையில் வைத் தியசாலையில் அனுமதிக்கப் பட்ட சம்பவம் ஒன்று வவு னியா பூவரசங்குளத்தில் இடம்பெற்றுள்ளது.

வவுனியா பூவரசங்குளம் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் விளையாட்டுப் போட் டிக்கான இல்ல அலங்காரச் செயற்பாட்டை குறித்த மாண வன் சக மாணவர்களுடன் இணைந்து மேற்கொண்டதா கவும், அதற்கான ஓவியம் வரை வதற்காக அன்றைய தினம் இரவு பாடசாலைக்கு தொலை பேசியைக் கொண்டு சென்றதா கவும் உறவினர்கள் தெரிவித் தனர்.

இவ்வாறு தொலைபேசியை பாடசாலையினுள் குறித்த மாணவன் பயன்படுத்துவதைப் பார்த்த அதிபர், அதனைப் பறித்ததுடன் மாணவனின் தந் தையை தன்னைச் சந்திக்க வேண்டும் என கூறியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அதன் பின்னர் மாணவனின் தாய் அதிபரிடம் தொலை பேசியில் விடயத்தைக் கேட்ட துடன் தொலைபேசியை வழங் குமாறும் கோரியுள்ளார்.

எனினும் அதிபர் தொலை பேசியை வழங்காது, தந்தையை கட்டாயம் தன்னைச் சந்திக்க வேண்டும் என தெரிவித் துள்ளார்.

இதனை அடுத்து தொலை பேசியின் ஊடாக மாணவனின் தந்தை அதிபரை தொடர்பு கொண்டு கதைத்துள்ளார்.

இதன் பின்னர், மாணவனின் தந்தை தனக்கு அச்சுறுத்தல் விடுத்ததாக பூவரசங்குளம் பொலிஸில் அதிபர் முறைப் பாட்டை மேற்கொண்டுள்ளார்.

இவ் முறைப்பாட்டை அடுத்து இரு பகுதியினரையும் பொலிஸார் அழைத்துப் பேசி விசாரணை நடத்தியதாக மாண வனின் உறவினர்கள் தெரிவித் தனர்.

இந்நிலையிலேயே அவமா னத்தைத் தாங்க முடியாமல் குறித்த மாணவன் நஞ்சருந்தி தற்கொலைக்கு முயன்றதாகவும் மாணவனின் உறவினர்கள் கூறினர்.

குறித்த மாணவனின் சக வகுப்பு மாணவ, மாணவிகள் வகுப்பறைக்குச் செல்லாமல் பாடசாலைக்கு முன்பாகக் கூடியிருந்தனர்.

இதனை அடுத்து வலயக் கல்விப் பணிமனை அதிகாரி கள், பாடசாலையில் மாணவ னின் உறவினர்களுடன் கலந்து ரையாடியதுடன் மாணவர்க ளுடனும் கலந்துரையாடினர்.

இச்சம்பவம் தொடர்பாக மாணவனின் பெற்றோரால் மனித உரிமை ஆணைக்குழு மற்றும் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிமனை ஆகியவற்றில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன் பிரகாரம் 12 ஆம் திகதி குறித்த முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைக்காக அதிபர் மற்றும் வலயக்கல்விப் பணிப்பாளர் ஆகியோர் மனித உரிமை ஆணைக்குழுவினால் அழைக்கப்படவுள்ளனர்.

அத்துடன் இச்சம்பவம் தொடர்பாக வலயக் கல்விப் பணிப்பாளரும் விசாரணை களை மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)



# வானில் பறந்த புகைக்கூண்டு

யாழ்ப்பாணம், மே 06

வல்வை அருள்மிகு முத்து மாரியம்மன் ஆலய வருடாந்த மகோற்சவத்தின் இறுதி நாள் நேற்று இடம்பெற்றது.

சித்திரை பௌர்ணமி தின மான நேற்றுக் காலை தீர்த் தோற்சவம் இடம்பெற்றது.

தீர்த்தோற்சவத்தை சிறப்பிக் கும் வகையில் ஊறணி தீர்த்தக் கடற்கரையில் இராட்சத புகைக்கூண்டு பறக்கவிடும் நிகழ்வும் இடம்பெற்றது.

இந்த புகைக்கூண்டு பறக்க விடுதல் என்பது இலங்கையில் வல்வெட்டித்துறையில் மட்டுமே இடம்பெற்று வரு வது தனிச்சிறப்பு வாய்ந்த குறிப் பிடத்தக்கது. (அ)

# வருமுன் காக்கும் பொறிமுறைகளை தமிழர் ஒருமித்துக் கையாளவேண்டும்

## ஆக்கிரமிப்புக்களை தடுப்பதற்கு இதுவே வழி என்கிறார் ரெலோவின் பேச்சாளர் சுரேந்திரன்



யாழ்ப்பாணம், மே 06

**தமிழ் மக்கள் மீதான நில, மொழி மற்றும் கலாசார ரீதியான ஆக்கிரமிப்புகள், அழித்தொழிப்புகளை தடுத்து நிறுத்த முன்னேற்பாடுகளை கொண்ட பொறிமுறைகளை நாம் உருவாக்கவேண்டும். அல்லது இருப்பவற்றை பொறிமுறைகளாகக் கையாளவேண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோவின் பேச்சாளர் குருசுவாமி சுரேந்திரன் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நடந்து முடிந்தவைகளுக்காக போராடும் நடைமுறை ஒருபுறம் இருக்க, நடக்கும் முன்னரே தடுத்து நிறுத்தக் கூடிய கட்டமைப்பை தமிழர்கள் உருவாக்க வேண்டும்.

தையிட்டி விகாரை கட்டி எழுப்பப்பட்டுள்ள விவகாரம் இதற்கு சிறந்த உதாரணமாகும். மாகாண சபை முறைமை முடிவுக்கு வந்த பின்னர் இதற்கான அத்திவாரம் இடப்பட்டுள்ளது. தனியார் ஒரு சிலருக்கு சொந்தமான காணி நிலங்களிலேயே இந்த விகாரை கட்டப்பட்டுள்ளது. ஒரு சில உரிமையாளர்கள் வழக்கு தொடுப்பதற்கு ஆர்வமாக முயற்சி செய்த பொழுதிலும் சரியான தரப்பினரிடம் அவர்கள் செல்லவில்லை.

அதேபோன்று அரசியல் தரப்பிலும் வழக்கு தொடுப்பதற்கு முயற்சி செய்து சில காணி உரிமையாளர்களை சந்தித்த பொழுது அந்த காணி உரிமையாளர்கள் வழக்கு தொடுப்பதில் அக்கறை கொண்டிருக்கவில்லை. வழக்கு தொடுப்பதற்கு அக்கறை கொண்ட தனியார் காணி உரிமையாளரும் அரசியல் தரப்பினரும் ஒருவரை ஒருவர் இறுதிவரை சந்திக்கவில்லை. அதனால் விகாரை கட்டப்படும் வரைக்கும் தனியாரால் நடவடிக்கை எடுக்க முடியாத அல்லது அரசியல் தரப்பை நாட முடியாத சூழ்நிலையில் இருந்திருப்பது துரதிஷ்டமே. இப்படிப்பட்ட நடவடிக்கைகளுக்கான ஒரு பொறிமுறை மிக அவசியமாகிறது.

மாகாண சபைக்கான காணி மற்றும் போலீஸ் அதிகாரங்களை நடைமுறைப்படுத்த வேண்டும், ஏற்கனவே அரசியல் யாப்பில் உள்ள அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி பலமான கட்டமைப்பாக மாற்ற வேண்டும் என்ற எமது கோரிக்கையின் பிரதான நோக்கம், அரசியல் தீர்வு எட்டப்படும் வரையில் இப்படியான ஆக்கிரமிப்புகளை தடுத்து நிறுத்த வேண்டும், அதை எம்மீதான ஆக்கிரமிப்புக்கு எதிரான பொறிமுறையாக கையாள வேண்டும் என்பதே. அதை ஒருபோதும் அரசியல் தீர்வாக நாம் கோரவில்லை.

அரசியல் முதிர்ச்சியற்ற, தமிழ் மக்கள் எதிர் கொண்டுள்ள அபாயத்தை உணராத சில தரப்புக்கள் அதை நாங்கள் அரசியல் தீர்வாக கோருகிறோம் என்று மக்களை தவறாக திசை திருப்பி தெரிந்தோ தெரியாமலோ அரசினுடைய நிகழ்ச்சி நிரலுக்குத் துணை போயிருக்கிறார்கள்.

இனியாவது நிலைமையை புரிந்து கொண்டு நமக்கான பொறி முறைகளை வகுக்கவும், இருக்கும் அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி அதைப் பொறிமுறையாகக் கையாளவும் தமிழ்த் தரப்பு தயாராக வேண்டும்.

ஒவ்வொரு விடயத்திற்கும் விளக்க உரைகளை வழங்குவதும் கட்சி நலன்கள் மற்றும் தேர்தல் நோக்கங்களுக்காக தமிழ் மக்களை தவறாக திசை திருப்பி வழிநடத்த முற்படுவதும், ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு உரம் சேர்க்குமே தவிர தமிழ் மக்களை காப்பதற்கு உதவாது. இனியாவது தமிழ் மக்கள் ஒன்றிணைந்து நம்மை காக்கும் பொறிமுறைகளை வகுத்துக் கொள்ளவும் இருப்பவற்றை சரியாகக் கையாளவும் முன் வர வேண்டும் என கோரி நிற்கிறோம். அதுவே நிலையான அரசியல் தீர்வு வரும் வரை எமது இனத்தின் இருப்பைத் தக்கவைக்கும் - என்றார். (அ)

# வடக்கில் அதிகாரிகளுக்கு ஜூலை முதல் இடமாற்றம்!

யாழ்ப்பாணம், மே. 06

வடக்கு மாகாணத்தில் கடமையாற்றும் பிரதேச செயலர்கள், மேலதிக மாவட்டச் செயலர்கள் உட்படப் பலருக்கு எதிர்வரும் ஜூலை மாதம் 10ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் வருடாந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சால் வழங்கப்பட்டுள்ள இடமாற்றப் பட்டியலின்படி, சங்கானை பிரதேச செயலர் திருமதி பி.பிரேமினி கிழக்கு மாகாண சபைக்கும், கிழக்கு மாகாண சபையில் பணியாற்றும் திருமதி கே.உதயகுமார் சங்கானை பிரதேச செயலராகவும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் க.சிறிமோகன், யாழ். மாவட்ட மேலதிக மாவட்டச் செயலராகவும், யாழ். மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் சு.முரளிதரன் கிளிநொச்சி மாவட்ட மேலதிக மாவட்ட செயலராகவும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாண கல்வி அமைச்சில் பணியாற்றும் திருமதி நளாயினி இன்பராஜ் கிளிநொச்சி மாவட்ட செயலகத்துக்கும், கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் பணியாற்றும் ந.திருலிங்கநாதன் வடக்கு மாகாண கல்வி அமைச்சுக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலராகப் பணியாற்றும் சி.கிருஷ்நேந்திரன் வடக்கு மாகாண சபைக்கும், யாழ். மாநகர சபை ஆணையாளர் த.ஜெயசீலன், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலராகவும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலை நகரப் பிரதேச செயலர் பி.தனேஸ்வரன் ஊர்காவற்றுறை பிரதேச செயலராகவும், ஊர்காவற்றுறை பிரதேச செயலர் திருமதி எஸ்.மஞ்சுளாதேவி திருகோணமலை நகரப் பிரதேச செயலராகவும் இடமாற்றப்பட்டுள்ளனர்.

கரைச்சிப் பிரதேச செயலர் பி.ஜெயகரன் வடக்கு மாகாண சபைக்கும், வடக்கு மாகாண சபையில் பணியாற்றும் பற்றிக் டிறைஞன், கரைச்சிப் பிரதேச செயலராகவும் இடமாற்றப்பட்டுள்ளனர். (அ)

# தையிட்டி திஸ்ஸ விகாரை ஜூன் 3 ஆம் திகதி திறப்பு!

யாழ்ப்பாணம், மே. 06

வலிகாமம் வடக்கு - தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரை பொசனன்று திறந்து வைக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

தையிட்டியில் பொதுமக்களின் காணியில் சட்டவிரோதமாக திஸ்ஸ விகாரை இராணுவத்தினரால் அமைக்கப்பட்டுள்ளது. இந்த விகாரைக்குக் கலசம் அண்மையில் வைக்கப்பட்டது.

இதையடுத்து விகாரையை அகற்றி தமிழ் மக்களின் காணிகளை விடுவிக்க வேண்டும் என்று போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் விகாரையை அடுத்த மாதம் 3ஆம் திகதி பொசனன்று திறந்து வைப்பதற்கான ஏற்பாடுகள் இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.ஷ (அ)

# திருமலை விமானப்படைத் தளத்தில் இலங்கை - இந்திய நட்புறவு அக்கடமி!

திருமலை, மே. 06

திருகோணமலையில் உள்ள இலங்கை விமானப்படை அக்கடமியில் இந்திய இலங்கை நட்புறவு கேட்போர் கூடத்திற்கான கட்டடத்துக்கு அடிக்கல்லை நேற்று முன்தினம் வியாழக்கிழமை இந்திய விமானப்படையின் தலைமை அதிகாரியான தளபதி வி.ஆர். சௌதாரி அடிக்கல் நாட்டினார்.

இந்தியாவின் "அண்டை நாடுகளுக்கு கொள்கைக்கு ஏற்ப 250 மில்லியன் மானிய உதவி வழங்கும் பொருட்டு நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயமாக இந்திய விமானப் படை தளபதி ஏர் சீப் மார்ஷல் விவேக் ராம் சௌதாரி கடந்த இரண்டாம் திகதி இலங்கை வந்தார்.

இந்தியாவும் இலங்கையும் இருதரப்பு உறவுகளின் 75 வருடங்களைக் கொண்டாடும் நிலையில், இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, தற்போதுள்ள ஆரோக்கியமான உறவுகளை ஆழப்படுத்துவதற்கும், அவற்றை வேறொரு நிலைக்கு கொண்டு செல்வதற்கும் இது ஒரு முன்னோடியாக விமானப்படைத் தளபதியின் விஜயம் அமைந்தது.

முன்னதாக, கடனில் சிக்கித் தவிக்கும் நாட்டின் பொது போக்குவரத்து உள்கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கான உதவியின் ஒரு பகுதியாக ஜனவரி 8 ஆம் தேதி இந்தியா 75 பயணிகள் பஸ்களை இலங்கைக்கு வழங்கியது.

நாட்டின் "அருகில் முதலில்" கொள்கையின் ஒரு பகுதியாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொள்கையின் கீழ், 1948 இல் சுதந்திரம் பெற்ற பின்னர் நாடு கண்டுள்ள மிக மோசமான பொருளாதார மற்றும் மனிதாபிமான நெருக்கடியிலிருந்து இலங்கையை மீட்பதற்கு இந்தியா பலமுனை உதவிகளை வழங்கி வருகிறது.

ஆனால் நெருக்கடி காலங்களில், பிரதமர் மோடி தலைமையிலான இந்திய அரசாங்கம் இலங்கையின் உண்மையான நண்பனாக இருந்து வருவதை விமானப்படைத் தளபதி நினைவு கூர்ந்தார். (அ)

# 570 பயணிகளை ஏற்றிய அமெரிக்க அதிசொகுசுக் கப்பல் கொழும்புக்கு!

கொழும்பு, மே. 06

அமெரிக்க சொகுசு பயணிகள் கப்பல் ஒன்று நேற்று பிற்பகல் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

570 பயணிகள் மற்றும் 369 பணியாளர்களுடன் இன்சிக்னியா என்ற கப்பல் இந்தியா - கொச்சியில் இருந்து வந்தது.

இந்த கப்பல் இன்று இரவு மியன்மார் நோக்கி புறப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்சிக்னியா கப்பலில் இருந்து வந்த சுற்றுலா குழுவினர் கொழும்பு நகருக்கு விஜயம் செய்ய உள்ளனர். (அ)



# யார் இந்த ஜெய்சங்கர்? இந்தியாவின் 'வலிமையான குரலாக' உருவெடுத்தது எப்படி?

ஜுபைர் அகமது

உக்ரேய்ன் போர் உலகை மேலும் பிளவுபடுத்தியுள்ளது என்றும் மேற்கத்திய நாடுகளால் உருவாக்கப்பட்ட உலக முறைமையில் பெரிய மாற்றம் தேவை என்றும் இந்தியா நம்புகிறது.

ஆனால் அமெரிக்கா போன்ற சக்தி வாய்ந்த நாட்டிற்கு இந்த உண்மையை யாரால் புரிய வைக்க முடியும்?

இதை சீனா வெளிப்படையாக கூறி வருகிறது. வளரும் நாடுகளின் தலைவர் என்று தன்னை அழைத்துக் கொள்ளும் இந்தியாவும் இந்த பொறுப்பை ஏற்றுள்ளது.

வளர்ந்து வரும் நாடுகளின் சிந்தனையை எந்த தயக்கமும் இல்லாமல், கட்டுப்பாடான வார்த்தைகளில் வெளிப்படுத்தும் நபராக இன்று இந்திய வெளியுறவு அமைச்சர் டாக்டர் சுப்ரமணியம் ஜெய்சங்கர் உருவெடுத்துள்ளார்.

இந்த பணியை ஜெய்சங்கர் சிறப்பாக செய்து வருவதாக இந்திய தரப்பில் கூறப்படுகிறது. ரஷ்யாவுடனான உறவை முறித்துக் கொள்ளவும், மேற்கத்திய முகாமில் இணைந்து இந்தப் போராட்டத்தில் ஈடுபடவும், சக்தி வாய்ந்த மேற்கத்திய கூட்டாளி நாடுகளிடம் இருந்து இந்தியாவுக்கு பெரும் அழுத்தம் உள்ளது, ஆனால் இந்தியா அவ்வாறு செய்யவில்லை.

இந்தப் போரில் எந்தத் தரப்பையும் தான் ஆதரிக்கப் போவதில்லை என்று இந்தியா தெளிவுபடுத்தியுள்ளது. உலக நாடுகளின் அழுத்தத்தை எதிர்கொள்வதில் இந்தியா காட்டிய புதிய தன்னம்பிக்கையின் மிகப்பெரிய முகம் ஜெய்சங்கர்.

வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரின் புகழ் இந்தியாவில் அதிகரித்து வருவதற்கு மிகப்பெரிய காரணம், அவர் அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் போன்ற உலகின் பெரும் வல்லரசுகளின் முன் உறுதியுடன் நிற்பதை மக்கள் பார்ப்பதுதான்.

ஜெய்சங்கரின் அறிக்கைகள் அச்சமற்றதாகவும், கூர்மையாகவும் சிலரின் பார்வையில் கேலிசெய்வதாகவும் உள்ளன.

சமீபத்திய ஆண்டுகளில், ஜனநாயகத்தை மதிப்பிடும் மேற்கத்திய நாடுகளின் முக்கிய அமைப்புகள், இந்தியாவில் ஜனநாயகத்தின் வீழ்ச்சி மற்றும் சிறுபான்மையினர் நடத்தப்படும் விதம் குறித்து கவலை தெரிவித்து வருகின்றன. இந்த கவலைகள் குறித்த ஜெய்சங்கரின் நிலைப்பாடு மிகவும் ஆக்ரோஷமாக உள்ளது.

"இது கபட நாடகம். உலகில் சிலர் இதுபோன்ற சான்றிதழ்களை வழங்குவதற்கு உரிமை உள்ளவர்கள் என்று தங்களை நினைத்துக்கொள்கிறார்கள். இந்தியா அவர்கள் சம்மதத்தை நாடுவதில்லை என்பதை அவர்களால் ஜீரணிக்க முடியவில்லை" என்று அவர் கூறினார்.

ஜெய்சங்கரின் இந்த அறிக்கையில் ஒரே ஒரு அதிர்ச்சியான விஷயம் இருந்தது. அவரது இந்த கூர்மையான அறிக்கை தூதாண்மை வாக்கியங்களின் சர்க்கரை பாகில் கலந்து கொடுக்கப்படவில்லை.

இந்தியாவின் சாமானிய மக்களும் தங்கள் நாட்டை யாராவது விமர்சித்தால் அதே மொழியில் பதிலளிப்பார்கள் என்பது ஜெய்சங்கருக்கு தெரியும். இத்தகைய அறிக்கைகள் ஜெய்சங்கரை சாமானிய இந்தியர்கள் மற்றும் குறிப்பாக தேசியவாதிகளின் பார்வையில் ஹீரோவாக ஆக்கியுள்ளன.

இந்த ஆண்டு ஜனவரியில், பாஜக தலைமையிலான அரசை 'இந்து தேசியவாத அரசு' என்று மேற்கத்திய ஊடகங்கள் கூறியபோது, ஜெய்சங்கர் அதற்கு கடுமையாக பதிலளித்தார்.

"வெளிநாட்டு செய்தித்தாள்களை படித்தால், இந்து தேசியவாத அரசு போன்ற வார்த்தைகளை பயன்படுத்துகின்றனர். அமெரிக்காவிலோ, ஐரோப்பாவிலோ கிறிஸ்தவ தேசியவாதிகள் என்று சொல்வதில்லை. குறிப்பாக நமக்காக இதுபோன்ற சொற்றொடர்களை அவர்கள் சேமித்து வைக்கின்றனர்" என்று அவர் கூறியிருந்தார்.

மேற்கத்திய நாடுகளுக்கு எதிரான ஜெய்சங்கரின் ஆக்ரோஷமான அணுகுமுறையை முழுமையாக ஆதரிப்பதாக அரசியல் மற்றும் வெளியுறவு நிபுணர் டாக்டர் சுவ்ரோக்மல் தத்தா கூறுகிறார்.

"உலக நாடுகள் குறிப்பாக மேற்கத்திய நாடுகளை கையாளும் போது, ஜெய்சங்கரின் பார்வையில் இந்தியாவின் நலன்கள் முதன்மையாக உள்ளன. உக்ரேய்னின் தற்போதைய நெருக்கடியின் போது ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் வாங்குவதற்கு மேற்கத்திய நாடுகளை அவர் எதிர்த்த விதம் காரணமாக அவர் இந்தியாவில் மிகவும் பிரபலமாகிவிட்டார்," என்று அவர் தெரிவித்தார்.

இருப்பினும், 'Modi's India: Hindu Nationalism and the Rise of Ethnic Democracy' என்ற நூலின் ஆசிரியரும்,



லண்டனில் உள்ள கிங்ஸ் கல்லூரியின் பேராசிரியருமான கிரிஸ்டோப் ஜாபர்லோ, 'ஜெய்சங்கரின் பாணி ஒரு பிரபலமான தேசியவாதியின் பாணி' என்று வாதிடுகிறார். அவர் தனது நாட்டு மக்களின் இதயங்களை வெல்வதற்காக இவற்றை செய்கிறார் என்று அவர் குறிப்பிட்டார்.

"ஜெய்சங்கர் மேற்கத்திய நாடுகளைப் பற்றி பேசும் விதத்தின் உண்மையான நோக்கம், உள்நாட்டில் தாக்கத்தை ஏற்படுத்துவதே ஆகும். இதுவே அவரது ஆக்ரோஷமான அணுகுமுறைக்கு முக்கிய காரணம். ஆனால், இந்த அணுகுமுறை புதியதல்ல." என்று கிறிஸ்டோப் ஜாபர்லோ கூறுகிறார்,

"ஜெய்சங்கர் இந்தியாவிற்கும் மேற்கு நாடுகளுக்கும் இடையே மத்தியஸ்தராக மிகவும் கவனமாகவும் புத்திசாலித்தனமாகவும், ரிவர்ஸ் இஞ்சினியரிங்கை பயன்படுத்துகிறார்," என்று லண்டனில் உள்ள வெஸ்ட்மின்ஸ்டர் பல்கலைக்கழகத்தின் ஜனநாயக ஆய்வு மையத்தின் இயக்குனர் பேராசிரியர் நிதாஷா கௌஸல் கூறுகிறார்.

மேற்கத்திய காலனித்துவ வரலாற்றைப் பற்றிய ஜெய்சங்கரின் விமர்சனத்தை ஆதரிக்கும் பலர் மேற்கில் இருப்பதாக நிதாஷா கௌஸல் கூறுகிறார். "ஆனால், மேற்கத்திய நாடுகளின் பழைய தவறான செயல்களை விமர்சிக்கும் தனது நாட்டு மக்களைக் கவரவும் அதே வாதங்களைப் அவர் பயன்படுத்துகிறார்," என்றும் அவர் குறிப்பிட்டார்.

## நட்பு மற்றும் எதிரி நாடுகள் எப்படிப் பார்க்கின்றன?

பேராசிரியர் ஹூவாங் யுன்சோங், சீனாவின் செங்டுவில் உள்ள சிச்சுவான் பல்கலைக்கழகத்தின் சர்வதேச ஆய்வுத்துறையின் இணை முதல்வர் ஆவார். ஜெய்சங்கர் சீனாவுக்கான இந்தியத் தூதராக நீண்ட காலம் பணியாற்றியவர்.

"சீனாவின் அறிவுசார் மற்றும் செயல் உத்தி வட்டாரங்களில் ஜெய்சங்கரை நன்கு அறிந்தவர்கள் சிலர் உள்ளனர். அவர்கள் ஜெய்சங்கரை ஒரு யதார்த்த அரசியல்வாதியாக மதிக்கிறார்கள். அவர் கடினமானவர், தந்திரமானவர் மற்றும் தைரியமானவர்." என்று பேராசிரியர் ஹூவாங் கூறுகிறார்.

"அவரது தூதாண்மை திறமைகளில், அமைதியான குணமும், கூர்மையான அறிவும் அடங்கும். இந்தியாவின் அதிமுக்கியமான சுயாட்சியை எவ்வாறு பராமரிப்பது என்பதில் அவரது மனம் எப்போதும் விழிப்புடன் இருக்கும்," என்றார் அவர்.

"மனித உரிமைகள் என்ற பெயரில் மற்ற நாடுகளில் தலையிட்டு, ஜனநாயகத்தை மேம்படுத்துவது என்ற பெயரில் மேற்கத்திய நாடுகள் பாசாங்குத்தனமான அணுகுமுறையை கடைப்பிடித்து வருகின்றன என்பதை நிச்சயமாக நாம் மறுக்க முடியாது," என்று பேராசிரியர் நிதாஷா கௌஸல் கூறினார்.

"ஜெய்சங்கரின் இந்த கூர்மையான பேச்சுகளை மேற்கத்திய நாடுகள் அறிந்திருக்கின்றன. ஆனால் சீனாவுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, ஜெய்சங்கரின் அறிக்கைகள் அத்தனை மோசமில்லை என்று கருதுகின்றன," என்கிறார் பேராசிரியர் நிதாஷா கௌஸல்.

மறுபுறம், மேற்கத்திய நாடுகளால் ஆதிக்கம் செலுத்தப்படும் உலக முறைமை மாறிவருகிறது என்ற அவரது நம்பிக்கைதான், ஜெய்சங்கரின் துணிச்சலான அறிக்கைகள் மற்றும் பேச்சுகளின் வேர் என்று பேராசிரியர் கிறிஸ்டோப் ஜாபர்லோ கருதுகிறார்.

ஜெய்சங்கர் தனது 'தி இண்டியா வே: ஸ்டாடெர்ஜீஸ் ஃபார் என் அன்செர்டன் வேர்ல்ட்' என்ற புத்தகத்தில் இதை மீண்டும் மீண்டும் மேற்கோள் காட்டியுள்ளார். இதுவரை நாம் கண்டிராத ஒரு மாற்றம் இன்று நம் முன் வந்து கொண்டிருக்கிறது" என்று அவர் எழுதியுள்ளார்.

## ஜெய்சங்கரின் வளர்ச்சி

அமைச்சரவையில் ஜெய்சங்கரின் வளர்ச்சி ஏறுமுகமாக இருப்பதாக மோடி அரசிற்குள்ளேயே ஒரு சிந்தனை இருக்கிறது. குறிப்பாக உக்ரேய்ன் போர், ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் வாங்குதல் போன்ற பிரச்சனைகளை ஜெய்சங்கர் கையாண்ட விதம் அவரது புகழை அதிகப்படுத்தியுள்ளது.

மோடியின் அமைச்சரவையில் அதிகம் விரும்பப்படும் அமைச்சர்களில் ஜெய்சங்கரும் ஒருவர் என்று அவரது ஆதரவாளர்கள் கருதுகின்றனர்.

"ஒரு வெளியுறவு அமைச்சராக மறைந்த சுஷ்மா ஸ்வராஜின் அதே மட்டத்தில் அவரை நான் வைக்கிறேன். வெளியுறவு அமைச்சராக டாக்டர். எஸ். ஜெய்சங்கரின் சாதனைகள் பண்டிட் ஜவஹர்லால் நேருவை விட மிக அதிகம் என்று நான் கருதுகிறேன்" என்று டாக்டர் சுவ்ரோக்மல் தத்தா கூறுகிறார்.

இது நிச்சயமாக பெரிய வார்த்தைகள்தான். ஆனால், இந்திய வெளியுறவு அமைச்சராகும் வரையிலான ஜெய்சங்கரின் பயணம், ஒரு தொழில்முறை தூதாண்மை அதிகாரியின் வெற்றிக்கு ஒரு குறிப்பிடத்தக்க உதாரணமாகும்.

1955 ஆம் ஆண்டு டெல்லியில் பிறந்த ஜெய்சங்கர், அரசு அதிகாரிகளின் புகழ்பெற்ற குடும்பத்தைச் சேர்ந்தவர். இவரது தந்தை கே. சுப்ரமணியம் நன்கு அறியப்பட்ட நிர்வாக அதிகாரி. ஜெய்சங்கர் டெல்லியின் புகழ்பெற்ற ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் இருந்து சர்வதேச உறவுகளில் முனைவர் பட்டம் பெற்றார்.

அவர் மேற்கத்திய ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட ஒரு திறந்த மனதுடைய தாராளவாத நபர் என்று அவரது அக்கால தோழர்கள் கருதுகிறார்கள்.

ஜெய்சங்கர் 1977ல் தூதாண்மை அதிகாரியாக தனது தொழில் வாழ்க்கை பயணத்தை தொடங்கி பல நாடுகளில் இந்தியாவின் தூதராக பணியாற்றினார்.

அமெரிக்காவுக்கான இந்தியத் தூதராக (2013-2015) ஜெய்சங்கர், அமெரிக்காவுடனான இந்தியாவின் பொருளாதார உறவுகளை விரிவுபடுத்தினார். அமெரிக்க கொள்கை வகுப்பாளர்களுடன் நெருக்கமான ஒருங்கிணைப்பில் பணியாற்றினார்.

இரு நாடுகளுக்கும் இடையே வலுவான செயல் உத்தி ஒத்துழைப்பை வளர்ப்பதில் அவர் மிக முக்கிய பங்கு வகித்தார்.

2009 மற்றும் 2013 க்கு இடையில் அவர் சீனாவுக்கான இந்திய தூதராக இருந்தபோது அவரது கருத்தியல் பயணத்தில் ஒரு முக்கியமான திருப்புமுனை ஏற்பட்டது என்று வெளியுறவுக் கொள்கை நிபுணர்கள் கூறுகின்றனர்.

இதற்கிடையில் 2011 இல், அவர் முதல் முறையாக நரேந்திர மோடியை சந்தித்தார். அப்போது குஜராத் முதலமைச்சராக இருந்த மோடி சீனாவுக்கு பயணம் மேற்கொண்டிருந்தார்.

சமீபத்தில் ஏஎன்ஐ செய்தி முகமைக்கு அளித்த பேட்டியில் ஜெய்சங்கர் அந்த நாட்களை நினைவு கூர்ந்தார். "நான் அவரை (நரேந்திர மோடியை) முதன்முதலில் 2011-ம் ஆண்டு சீனாவில் சந்தித்தேன். அவர் குஜராத் முதல்வராக இருந்தபோது சீனாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தார். அப்போது அவர் என் மீது ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தினார்," என்று ஜெய்சங்கர் கூறினார்.

"2011 வரை பல முதல்வர்களை இதுபோன்ற சுற்றுப் பயணங்களின்போது நான் பார்த்திருக்கிறேன். ஆனால் இவ்வளவு சிறப்பான தயாரிப்புடன் வருகை தந்தவர்களை நான் பார்த்ததில்லை," என்றார் அவர்.

## ஜெய்சங்கரின் கருத்தியல்

2014-ம் ஆண்டு நரேந்திர மோடி பிரதமராக பதவியேற்ற நேரத்தில், அமெரிக்காவுக்கான இந்திய தூதராக ஜெய்சங்கர் ஏற்கனவே நியமிக்கப்பட்டிருந்தார்.

2014 செப்டம்பரில் நரேந்திர மோடி பிரதமராக முதல் முறையாக அமெரிக்கா சென்றபோது, ஜெய்சங்கருடனான அவரது சிறந்த உறவு வெளிப்பட்டது. இது ஜெய்சங்கரின் கருத்தியல் பார்வையில் ஏற்பட்ட மாற்றத்தால் நிகழ்ந்ததா என்று சொல்வது கடினம் என்று விமர்சகர்கள் கூறுகின்றனர்.

நரேந்திர மோடியின் முதல் அமெரிக்கப் பயணத்தின் ஏற்பாடுகளில், அமெரிக்காவுக்கான இந்திய தூதராக இருந்த ஜெய்சங்கர் முக்கியப் பங்காற்றினார்.

நியூயார்க்கின் மேடிசன் ஸ்கொயர் கார்டனில் 'ஹவுடி மோடி' வரவேற்பிற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இது பரவலாக அனைவராலும் விவாதிக்கப்பட்டது.

"மேடிசன் ஸ்கொயர் நிகழ்ச்சியின் போது நான் அமெரிக்காவுக்கான இந்திய தூதராக இருந்தேன். அந்த நிகழ்ச்சி ஒரு வரலாற்று நிகழ்வு என்று பலர் நம்புகிறார்கள்," என்று ஜெய்சங்கரே கடந்த ஆண்டு ஒரு நிகழ்ச்சியில் கூறியிருந்தார்.

நரேந்திர மோதி அவரை வெளியுறவு செயலராக நியமித்தபோது (2015-2018), இந்தியாவின் வெளியுறவுக்

(09ஆம் பக்கம் பார்க்க)

# புடினை கொல்ல உக்ரேய்ன் முயற்சிப்பதாக ரஷ்ய அதிபர் மாளிகை குற்றச்சாட்டு!

## என்ன நடந்தது?

ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் உள்ள அதிபர் மாளிகையான கிரெம்ளினை இலக்கு வைத்து பறந்த இரண்டு ஆளில்லா விமானங்களை (ட்ரோன்) வீழ்த்தியதாக ரஷ்யா தெரிவித்துள்ளது. இதன் மூலம் தங்களுடைய அதிபர் விளாதிமிர் புடினை கொல்ல உக்ரேய்ன் முயற்சித்ததாக கிரெம்ளின் குற்றம்சாட்டியிருக்கிறது.



சமூக ஊடகங்களில் சரிபார்க்கப்படாத காணொளி காட்சியொன்றில் கிரெம்ளினுக்கு மேலே ஒரு பொருள் அது வீழ்த்தப்படும் முன்பாக பறப்பதை காண முடிகிறது.

இந்நிலையில், இந்த ட்ரோன் தாக்குதலுக்கும் தனக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று உக்ரேய்ன் தெரிவித்துள்ளது.

மின்னணு ரேடார் தளவாடத்தை பயன்படுத்தி இந்த இரண்டு ட்ரோன்களும் முடக்கப்பட்டதாக ரஷ்யா தெரிவித்துள்ளது. இந்த சம்பவம் நடந்தபோது அதிபர் புடின் கிரெம்ளினில் இல்லை என்று அவரது செய்தித் தொடர்பாளர் கூறினார்.

நடந்த சம்பவம் தொடர்பாக கிரெம்ளின் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், "2ம் திகதி, உக்ரேய்ன் ஆட்சியாளர் ரஷ்ய கூட்டமைப்பின் தலைவரை இலக்கு வைத்து கிரெம்ளின் மாளிகை மீது ஆளில்லா வான்வழி சாதனங்கள் மூலம் தாக்குதல் நடத்த முயன்றது." என கூறப்பட்டுள்ளது.

மேலும், "இது திட்டமிட்ட பயங்கரவாத செயலாகவும், அதிபர் மீதான படுகொலை முயற்சியாகவும் கருதுகிறோம்." எங்கு, எப்போது தேவை என்று கருதினாலும் பதிலடி நடவடிக்கைகளை எடுக்க ரஷ்யாவிற்கு உரிமை உள்ளது" என்று செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ரஷ்ய அதிபர் புடினுக்கு மிக உயரிய அளவிலான தனி பாதுகாப்பு உள்ளது. இது குறித்து பிபிசியின் ரஷ்யா ஆசிரியர் ஸ்டீவ் ரோசன்பெர்க் கூறுகையில், "ட்ரோன்கள் கிரெம்ளினுக்கு அருகே சென்றிருக்கலாம் என்று நினைப்பது கூட ஆச்சரியமாக இருக்கிறது. நடந்த தாக்குதலில் அதிபருக்கு எதுவும் ஆகவில்லை. அவரது அன்றாட பணிகள் எப்போதும் போல் தொடரும் என்று கிரெம்ளின் தெரிவித்துள்ளது. மாஸ்கோவிற்கு வெளியே நோவோ ஒகாரியோவோவில் அதிபர் இருந்துள்ளார்,"



என்று தெரிவித்தார்.

**ரஷ்யா தாக்குதல்**

ரஷ்ய சமூக ஊடகங்களில் பகிரப்பட்ட காணொளியில் புதன்கிழமை அதிகாலை நேரத்தில் மத்திய மாஸ்கோவில் புகை படிந்திருந்ததை காண முடிந்தது.

"இந்த சம்பவத்தைத் தொடர்ந்து கிரெம்ளின் வளாகத்தில் ட்ரோன்களின் பாகங்கள் விழுந்துள்ளன. ஆனால் இதில் யாரும் காயம் அடையவில்லை. கட்டடங்களுக்கும் சேதம் ஏற்படவில்லை," என்று கிரெம்ளின் தெரிவித்துள்ளது.

ரஷ்யாவின் 'மே 9 வெற்றி தின' அணிவகுப்புக்கு சில தினங்களுக்கு முன்பு இந்த சம்பவம் நடந்துள்ளதாகவும் கிரெம்ளின் அதன் செய்திக்குறிப்பில் கூறியுள்ளது.

அந்த அணிவகுப்பில் வெளிநாட்டு பிரமுகர்கள் பலர் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, ரஷ்யாவின் வெற்றி தின அணிவகுப்பு திட்டமிட்டபடி நடைபெறும் என்று ரஷ்ய செய்தி நிறுவனங்கள் கிரெம்ளினை மேற்கோள்காட்டி தெரிவித்தன.



இந்நிலையில், "ரஷ்யாவில் நடந்த சம்பவம், மே 9 நிகழ்வுக்கு முன்பு நிலைமையை பதற்றமாக்கும் வகையில் நடத்தப்பட்டுள்ளது" என்று உக்ரேய்ன் அதிபரின் செய்தித் தொடர்பாளர் செரி நிகிஃபோரோஃப் கூறினார்.

**புடின் மீது தாக்குதல் முயற்சி**

இதற்கிடையே, மாஸ்கோ நகரில் அங்கீகரிக்கப்படாத ட்ரோன் விமானங்கள் பறப்பதற்கு நகர மேயர் செர்கே சோபியானின் புதன்கிழமை தடை விதித்துள்ளார்.

ட்ரோன் விமானங்களுக்கு அரசாங்கத்தின் சிறப்பு அனுமதி தேவைப்படும் என்று அவர் கூறினார்.

ரஷ்யாவில் உள்ள பல நகரங்கள் இந்த ஆண்டு வெற்றி தின கொண்டாட்டங்களின் தன்மையை குறைத்துக் கொள்வதாக ஏற்கெனவே அறிவித்துள்ளன.

பாதுகாப்பு காரணங்களுக்காகவும் உக்ரேய்னிய சார்பு படைகளின் சாத்தியமிகு தாக்குதல்களை மேற்கோள்காட்டியும் அணிவகுப்பு நிகழ்ச்சியில் மாற்றங்கள் செய்யப்படுவதாக ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்தனர்.

ரஷ்யாவில் கடந்த சில வாரங்களாக பல்வேறு இடங்களில் வெடிப்புகள் மற்றும் தீ விபத்து சம்பவங்கள் பதிவாகி வருகின்றன.

---

# யார் இந்த ஜெய்சங்கர்?...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொள்கையை வடிவமைப்பதில் அவர் மிக முக்கிய பங்கு வகித்தார்.

குறிப்பாக, 'விதிகளின் அடிப்படையிலான உலக முறைமை' பற்றிய இந்தியாவின் பார்வையை வடிவமைப்பதில் அவரது முக்கிய பங்களிப்பு இருந்தது.

வெளியுறவுச்செயலராக இருந்தபோது, நரேந்திர மோடியுடன் பல வெளிநாட்டு சுற்றுப்பயணங்களுக்குச்சென்றதாக ஜெய்சங்கர் கூறுகிறார்.

இருப்பினும் ஜெய்சங்கர் ஒரு வெளிநாட்டு சேவை அதிகாரியின் வரம்பிற்குள் இருக்காமல், தனது அரசியல் எஜமானருக்கு அதிகமாக சேவை செய்ததாகவும் குற்றச்சாட்டுகள் உள்ளன.

2019 மக்களவை தேர்தலில் வெற்றி பெற்றபிறகு பிரதமர் மோடி, வெளியுறவு அமைச்சராக ஜெய்சங்கரை நியமித்தபோது, அவர் வெளியுறவுச்செயலர் பதவியில் இருந்து ஓய்வு பெற்று புதிய வாழ்க்கைக்கு தயாராகிக்கொண்டிருந்தார்.

ஓய்வு பெற்ற வெளியுறவுச்செயலரை நேரடியாக கேபினட் அமைச்சராக்குவது மிகவும் அரிதானது என்று வெளியுறவுக் கொள்கை நிபுணர்கள் கூறுகின்றனர். தான் இதை எதிர்பார்க்கவில்லை என்று சமீபத்தில் யுஜே-க்கு அளித்த பேட்டியில், ஜெய்சங்கர் ஒப்புக்கொண்டார்.

இந்த யோசனையை ஏற்றுக்கொள்வதற்கு முன்பு ஒரு மாதம் யோசித்ததாக ஜெய்சங்கர் ஒரு பேட்டியில் கூறினார். இறுதியாக, வெளியுறவு அமைச்சராவதற்கு முன் அவர் முறைப்படி ஆளும் பாரதிய ஜனதா கட்சியில் உறுப்பினராகச்சேர்ந்தார்.

அவர் வெளியுறவு அமைச்சராகப் பதவியேற்றபோது ஒரு முக்கிய நாளிதழ், 'மோடியின் பிரச்சனைகளை நீக்குபவர் கேபினட் அமைச்சராகப் பதவியேற்றார்' என்ற தலைப்பை அளித்திருந்தது.

**ஜெய்சங்கரின் வெளியுறவுக் கொள்கை தர்க்கரீதியானதா?**

அவரது வெளியுறவுக் கொள்கை மூன்று சித்தாந்தங்களை அடிப்படையாக்கொண்டது என்று ஜெய்சங்கரின் புத்தகம் கூறுகிறது.

கூட்டணிகளைத் தவிர்த்தல்: அவர் கூட்டணிகளை விட ஒத்துழைப்பை நம்புகிறார். அவர் பன்மைத்துவம் அல்லது பலதரப்பு அரசியலை ஆதரிக்கிறார்.

அவர் பலமுனை உலகத்தை நம்புகிறார். இந்த உலக முறைமையில் உள்ளார்ந்த போராட்டங்களின் நன்மைகளை பெற விரும்புகிறார்.

இந்த இரண்டு விஷயங்களின் விளைவாக எழும் முரண்பாடுகளை அவர் ஏற்றுக்கொள்கிறார்.

ஜெய்சங்கரின் புத்தகம் 2020 இல் வெளியிடப்பட்டது. அதன் பிறகு நிறைய விஷயங்கள் மாறிவிட்டன.

"இந்தியா, சீனாவுடன் இணைந்து 21ம் நூற்றாண்டை ஆசியாவின் நூற்றாண்டாக மாற்ற முடியும் என்று ஜெய்சங்கர் நம்புகிறார். அவர் தனது புத்தகத்திலும் இந்த யோசனையை முன்னெடுத்துச் செல்கிறார்.

ஜெய்சங்கரின் புத்தகத்தைப் படித்தவருக்கு அவர் சீனாவின் வேகமான முன்னேற்றத்தின் ரசிகர் என்பது தெரியும். சீனாவிடம் இருந்து இந்தியா கற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர் விரும்புகிறார்," என்று பேராசிரியர் ஜாஃப்ரலோ கூறுகிறார்.

**முரண்பாடுகள்**

சீன அறிஞர், பேராசிரியர் ஹுவாங் யுன்சாங், "சீனாவும் இந்தியாவும் இணைந்து ஆசியாவின் நூற்றாண்டை உருவாக்க வேண்டும் என்ற ஜெய்சங்கரின் கருத்து, அவரது ஆக்கிரமிப்புக் கொள்கை மற்றும் சீனா மீதான அவரது அணுகுமுறையுடன் சிறிதும் பொருந்தவில்லை" என்று வாதிடுகிறார்.

அதற்கான காரணத்தை விளக்கிய பேராசிரியர் ஹுவாங், 'சீனாவும் இந்தியாவும் இரண்டு வெவ்வேறு கிழக்கு நாகரிகங்கள். அவை முற்றிலும் வேறுபட்ட கலாச்சாரங்கள் மற்றும் புவியியல் பகுதிகளில் வளர்ந்துள்ளன.வரலாற்றில் மிகக் குறைந்த காலத்திற்கு மட்டுமே அவை தொடர்புபடுத்தப்பட்டுள்ளன," என்றார்.

'இன்று இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு ஒரு செயல் உத்தி கூட்டாண்மையிலிருந்து, எதிரி அண்டை நாடாக குறைக்கப்பட்டுள்ளது. நட்பு உறவுகளின் இடத்தை இப்போது பகை மற்றும் அலட்சியம் எடுத்துக்கொண்டுள்ளது," என்று பேராசிரியர் ஹுவாங் கூறுகிறார்.

இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையே நெருக்கமான ஒத்துழைப்புடன் ஆசிய நூற்றாண்டை வடிவமைக்கும் ஜெய்சங்கரின் யோசனை நடக்கக்கூடியது என்று பேராசிரியர் ஜாஃப்ரலோ கருதவில்லை. அப்படி நடப்பது மிகவும் அரிது என்கிறார் அவர்.

சீனாவும் இந்தியாவும் இணைந்து ஆசிய நூற்றாண்டை உருவாக்க முடியும் என்ற ஜெய்சங்கரின் கோட்பாட்டை டாக்டர் சுவ்ரோக்மல் தத்தா நம்புகிறார். ஆனால், 'சீனா முதலில் தன் வழியை சரிசெய்துகொள்ள வேண்டும்' என்று அவர் கூறுகிறார்.

"நிச்சயமாக இந்த இரண்டு மாபெரும் ஆசிய சக்திகளும் இணைந்து ஆசிய நூற்றாண்டின் கனவை நிஜமாக்க முடியும். இது சாத்தியம்தான். ஆனால், சீனா தனது இந்திய விரோத போக்கை கட்டுப்படுத்த வேண்டும்," என்று அவர் குறிப்பிட்டார்.

வெளிநாடுகளில் இந்தியாவின் நண்பர்கள் மற்றும் எதிரிகளை கையாள்வதில் நீண்ட அனுபவம் உள்ள ஒரு மூத்த அரசியல்வாதி, இந்தியாவின் செல்வாக்கு மட்டுப்படுத்தப்பட்டதாக கருதுகிறார்.

ஜெய்சங்கரை விட சீனாவைப் புரிந்து கொண்ட தொழில்முறை தூதர் வேறு யாரும் இல்லை என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

அதேபோல வேறு எந்த ஒரு அரசியல்தலைவரும் மோடியைப்போல ஒன்பது முறை சீனாவுக்கு பயணம் மேற்கொண்டதில்லை. நான்கு முறை குஜராத்தின் முதல்வராகவும், ஐந்து முறை இந்தியப் பிரதமராகவும் அவர் அங்கு சென்றுள்ளார்.

சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவில் பதற்றத்தை குறைப்பார்கள் இந்த இருவர் மீதும் எதிர்பார்ப்பு இருந்தது.

ஆனால் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் பதற்றம் மேலும் அதிகரித்துள்ளது போல காணப்படுகிறது. அமைதி ஒப்பந்தம் ஏற்படும் நம்பிக்கையும் தற்போது தென்படவில்லை.

# ஈழத்தமிழருக்கு எதிராக நடைபெற்றது இனப்படுகொலை என்பதை பிரிட்டன் அங்கீகரிக்க கோரி பிரசாரம் ஆரம்பம்

லண்டன், மே. 06

இலங்கை அரசாங்கத்தால் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்டது மற்றும் நடத்தப் பட்டுக் கொண்டிருப்பது திட்டமிட்ட இனப்படுகொலையே என்பதை பிரித்தானிய அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து இனப்படுகொலையை தடுப்பதற்கும் தண்டிப்பதற்குமான சர்வதேச மையம் சர்வதேச மட்டத்திலான பிரச்சார போராட்டம் ஒன்றை கடந்த வாரம் ஆரம்பித்து வைத்துள்ளது.

அதன் முதல்கட்டமாக, கனடாவை தளமாக கொண்டு இயங்கும் தமிழின அழிப்பிற்கான நினைவாலத்துடன் இணைந்து, பிரித்தானிய பிரதமரை நோக்கிய இணையவழி கையொப்ப போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

பிரிட்டன் பாராளுமன்றம், சிறிலங்காவால் இழைக்கப்படுவது தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலை என்பதை உத்தியோகபூர்வமாக ஏற்றுக் கொள்ளவேண்டும் என்றும், அவ்வாறு ஏற்றுக்கொள்வதற்கு தீர்ப்பாயமொன்று அவசியமெனில், அதனை உள்ளக ரீதியிலோ அல்லது ஏனைய நாடுகளுடன் இணைந்தோ நிறுவவேண்டும் என்றும் இந்த கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்ற இனப்படுகொலை தொடர்பில் சர்வதேச சமூகமும் ஊடகங்களும் அமைதிகாத்துவருவது எமக்கு மிகுந்த வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ் நாடு மற்றும் தமிழீழத்திற்கு வெளியே மலேசிய தவிர்ந்த பெரும்பான்மையான புலம் பெயர் வாழ்விடமாக கனடா உள்ளது.

கனேடிய பாராளுமன்றம் கடந்த வருடம் 2022 இல் மே 18 தினத்தை தமிழின அழிப்பு நினைவு தினமாக முழுமனதாக ஏற்று கொண்டதுடன், சிறிலங்காவினால் தமிழின அழிப்பு நடைபெற்றதையும் ஒருமனதாக பிரேரணை ஊடக ஏற்றுக்கொண்டுள்ளது.

பல தமிழ் தன்னார்வலர்களும், அமைப்புகளும், மனிதவுரிமை ஆர்வலர்களும் 17 ஆயிரத்திற்கு மேலான ஆதரவு கையொப்பம் பெறப்பட்ட நீண்ட கால கோரிக்கைகளும் இதற்கு காரணமாகின.

அத்துடன் கனடா மற்றும் அமெரிக்காவில் சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் இராணுவ தளபதிகளுக்கு உள்நுழைவு தடையும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பிரித்தானியா புலம் பெயர் தமிழர்களின் இரண்டாவது வாழ்விடமாக திகழ்கின்ற போதிலும், இலங்கையில் தமிழின அழிப்பு இடம்பெற்றது என்ற உண்மையை ஏற்றுக்கொள்வதற்கான எந்தவொரு நடவடிக்கை யும் பிரிட்டனால் முன்னெடுக்கப்படாமை கவலையளிக்கின்றது.

அதை நிவர்த்தி செய்யும் வகையில், கடந்த 2021 இல் சீனாவின் உர்கர் மக்களுக்கு இனஅழிப்பு நடைபெற்றதை பிரித்தானியா முறையாக ஏற்றது போன்று, சிறிலங்காவின் தமிழின அழிப்பையும் பிரித்தானிய பாராளுமன்று ஏற்க வேண்டும். - என்றும் இந்த கோரிக்கையில் கேட்கப்பட்டுள்ளது.

ஈழ தமிழ் மக்கள் இன்றும் இலங்கை அரசாங்கங்களினால் திட்டமிட்டு நிகழ்த்தப்படும் கட்டமைப்பு மற்றும் கலாசார ரீதியானதுமான இன அழிப்பை அனுபவித்து வருகின்றார்கள்.

பாரிய இன அழிப்பு இடம்பெற்று 14 வருடங்கள் கடந்துள்ள நிலையில், தமிழின அழிப்பு என்ற உண்மையை ஏற்றுக்கொள்வது அவசியம் என அதற்கான தரவுகளுடன் வலியுறுத்துகிறது இந்த கோரிக்கை.

## இலங்கை கிரிக்கெட் வீரர்கள் மீது லாஹூரில் தாக்குதல் நடத்திய சந்தேகநபர் சுட்டுக் கொலை!

கொழும்பு, மே. 06

2009 ஆம் ஆண்டு இலங்கை கிரிக்கெட் அணி வீரர்களை இலக்கு வைத்து, பாகிஸ்தானின் லாஹூரில் பயங்கரவாத தாக்குதல் நடத்திய குழுவின் பிரதான சந்தேகநபர் அந்நாட்டு பொலிஸாரால் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

பாகிஸ்தானில் உள்ள தேரா ஸ்மைல் கான் நகரில், பாகிஸ்தான் பொலிஸாருடன் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இக்பால் அல்லது பாலி கயாரா என அழைக்கப்படும் ஒருவரே கொல்லப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

உயிரிழந்தவர் பாகிஸ்தானிலுள்ள தலிபான் அமைப்பின் துணை பிரிவுடன் தொடர்புபட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்பால் அல்லது பாலி கயாரா 206 பயங்கரவாத தாக்குதல்கள், பல்வேறு கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் 2009 ஆம் ஆண்டு இலங்கை கிரிக்கெட் அணி மீது நடத்தப்பட்ட பயங்கரவாத தாக்குதலுக்கு மேலதிகமாக, அண்மையில் பாகிஸ்தானின் வைத்தியசாலையொன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் பிரதான சந்தேகநபர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (அ)

## சங்கானையில் போர்த்தேங்காய் அடித்தல்



யாழ்ப்பாணம், மே. 06

சங்கானை மாவடி இந்து இளைஞர் மன்றத்தின் ஏற் பாட்டில் வருடந் தோறும் இடம்பெறும் பாரம்பரிய விளை யாட்டு விழாவின் முதலாம் நாளான நேற்று போர்த் தேங் காய் நிகழ்வு சங்கானை மாவடி ஞான வைரவர் ஆலய முன்ற லில் இடம்பெற்றது.

பல்வேறு பிரிவுகளாக இடம்பெற்ற போர்த் தேங்காய் போட்டிகளில் சிறுவர்கள், இளைஞர், யுவதிகள் என பலரும் பங்குபற்றினர்

அதேவேளை சிறுவர்களுக்கான கேக் உண்ணும் போட்டியும், தயிர் முட்டி அடிக்கும் போட்டியும் இடம்பெற்றதுடன் குறித்த போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வும் நேற்று இடம்பெற்றது.

அதேவேளை போர்த் தேங்காய் போட்டியினை பார்வையிடுவதற்கு பல்வேறு பகுதிகளிலும் இருந்து மக்கள் வருகை தந்திருந்தனர். (அ)






# மீன் கடைகளையும் மூடுமாறு பணிப்பு!

**கடற்றொழிலாளர்கள் விசனம்**

மட்டக்களப்பு, மே. 06

**மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பகுதியில் வெசாக் தினத்தை முன்னிட்டு மூன்று நாட்களுக்கு இறைச்சிக்டைகளுடன் மீன்கடைகளையும் மூடுமாறு பணிக்கப்பட்டுள்ளமை குறித்து கடற்றொழிலாளர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.**

வெசாக் தினத்தை முன்னிட்டு வழமையாக இறைச்சிக்கடைகள் மட்டுமே மூடுவதாகவும் ஆனால் தற்போது மீன்கடையினையும் மூடுமாறு பணித்துள்ளமையால் தாங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கடற்றொழிலாளர்கள் கூறினர்.

தாங்கள் மூன்று தினங்களுக்குரிய மீன்களை சேமித்துவைத்திருந்த நிலையில் மாநகரசபையின் அறிவிப்பானது தமக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாக கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மாநகரசபையின் ஆணையாளர் என்.மதிவண்ணனிடம் வினவிய போது, வழமையாக இறைச்சிக்கடைகளை வெசாக் தினத்தில் மூடுவதற்கான அறிவுறுத்தலை வழங்குவதாகவும் இம்முறை அரசாங்கம் புதிதாக மீன்கடைகளையும் மூடுமாறு பணித்துள்ளதாகவும் இது தொடர்பில் மாற்று ஏற்பாடுகள் குறித்து கலந்துரையாடிவருவதாகவும் தெரிவித்தார். (அ)

# வினாடி வினாப் போட்டியில் கல்முனை சாஹிரா முதலிடம்



அக்கரைப்பற்று, மே. 06

கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையில் இரு மொழி மூலம் கல்வி கற்கும் இரு மாணவர்கள் மாகாண மட்டத்தில் அறிவியல் வினாடி வினாப் போட்டியில் சாதனை படைத்து பாடசாலைக்குப் பெருமை தேடிக் கொடுத்துள்ளனர்.

கல்லடி கிரான் வித்தியாலயத்தில் ஆங்கில மொழியில் இடம்பெற்ற மாகாண மட்ட இந்த வினாடி வினாப் போட்டியில் தரம் 11 இல் இருமொழி மூலம் கல்வி கற்கும் ஏ.எம்.நஸாத் அஸ்னி முதலாம் இடத்தையும், தரம் 10 இல் இருமொழி மூலம் கல்வி கற்கும் மாணவன் எஸ்.எம். ஷிபாப் அதி விசேட தேர்ச்சியும் பெற்றுள்ளனர்.

இந்த மாணவர்களுக்குப் பயிற்சியளித்த அறிவியல் ஆசிரியர்களுக்கும் இருமொழிக் கல்வி மற்றும் அறிவியல் ஆசிரியர்களுக்கான (இருமொழி) ஒருங்கிணைப்பாளருடன் (இருமொழி) சாஹிராவுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் பாடுபட்டமைக்கு பாடசாலையின் அதிபர் எம்.ஐ. ஜாபிர் உட்பட பிரதியதிபர்கள் உதவி அதிபர், கல்வி சார், சாரா ஊழியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர் சங்கத்தினர் தமது நன்றியைத் தெரிவித்தனர். (அ)

# விபத்தில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

திருமலை, மே. 06

ஹபரனை - கொழும்பு வீதியில் நேற்று முன் தினம் மாலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தொன்றில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்ததோடு, அவருடன் சென்ற மற்றுமொருவர் படுகாயம் அடைந்த நிலையில், ஹபரணை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கிண்ணியா, மாலிந்துறையை சேர்ந்த முகம்மது இஸ்மாயில் முகம்மது இஸாம் (வயது 43) என்ற குடும்பஸ்தரே இந்த விபத்தில் உயிரிழந்தவராவார்.

மேலும், இவரது உறவினரும் இரண்டு பிள்ளைகளின் தந்தையுமான செய்யது முஹம்மது முஹம்மது றியாஸ் (வயது 40) என்பவர் படுகாயமடைந்து அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்தில் மரணமானவர் ஜப்பான் நாட்டுக்கு தொழிலுக்கு செல்வதற்காக அக்குறுனை பகுதி உள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் ஒருவரை மோட்டார் சைக்கிளில் சந்திக்க சென்றபோதே, இந்த விபத்து நிகழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள், வளைவு ஒன்றில் இருந்த மின் கம்பத்துடன் மோதி, இந்த விபத்தில் ஏற்பட்டிருப்பதாகவும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



மட்டக்களப்பு திருமலை வீதி பிள்ளையாரடியில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ புலவி பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த புதன்கிழமை ஆரம்பமானது. நேற்று முன் தினம் தேர் பவனி நடைபெற்றதுடன் நேற்று தீர்த்த திருவிழா நடைபெற்றது. (அ)

# இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் பொலிஸ் சார்ஜன்ட் கைதானார்!

அக்கரைப்பற்று, மே. 06

அம்பாறை மாவட்டத்தின் தமன பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் 50,000 ரூபாவை இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் புலனாய்வு அதிகாரிகள் குழுவினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தமன பிரதேசத்தில் வசிக்கும் ஒருவருக்கு எதிராக அம்பாறை நீதிவான் நீதிமன்றில் நிலுவையில் உள்ள வழக்கு ஒன்று தொடர்பில் சாதமாகச் செயற்படுவதற்காகவே இந்த இலஞ்சம் கோரப்பட்டுள்ளதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரான பொலிஸ் சார்ஜன்ட் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஆணைக்குழுவின் புலனாய்வு அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர். (அ)

# சுகாதாரப் பகுதியினர் கள விஜயம்

மட்டக்களப்பு, மே. 06

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகரித்து வரும் டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்தும் நோக்கில் டெங்கு கள விஜயம் முன்னெடுக்கப்பட்டது.

காத்தான்குடி பிரதேசத்தில் பிரதேச செயலாளர் உதய சிறீதரின் வழிகாட்டலின் கீழ் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் இதில் ஈடுபட்டனர்.

புதிய காத்தான்குடி அன்வர் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவு,பதுறியா நூறாணியா போன்ற பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுகளில் களவிஜயம் மேற்கொள்ளப் பட்டது. (அ)

# சமூர்த்தி பயனாளிகளுக்கு அரிசிப் பொதிகள் வழங்கல்

அக்கரைப்பற்று, மே. 06

பிரதேச செயலகங்களால் ஒவ்வொரு கிராமசேவக பிரிவின் கீழுள்ள சமூர்த்தி பயனாளி குடும்பங்களுக்கும் 20 கிலோ நிறையுடைய அரிசி பொதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேசசெயலகத்திற்குட்பட்ட மயிலம்பாவெளி கிராம சேவக பிரிவின் கீழுள்ள 500 குடும்பங்களுக்கு மேற்பட்ட சமூர்த்தி பயனாளிகளுக்கு கடந்த வியாழக்கிழமை மயிலம்பாவெளி கிராம சேவக அலுவலகத்தில் அரிசி பொதிகள் வழங்கப்பட்டது. (அ)



திருக்கோணமலை மடத்தடி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம் பிரமோற்சவம் பத்தாம் நாள் திருவிழா காட்சிகள் இவை. (அ)

# பெண் உட்பட இரண்டு பேர் மதுபானங்களுடன் கைது!

மட்டக்களப்பு, மே. 06

வெசாக் வாரத்தையொட்டி காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போது சட்டவிரோதமான முறையில் பதுக்கி வைத்திருந்த மதுபானங்கள் மற்றும் கசிப்பு போத்தல்கள் கைபற்றப்பட்டதுடன் பெண் உட்பட இருவரை கைது செய்துள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய போதைவஸ்து ஒழிப்புப் பிரிவு பொறுப்பதிகாரி எச்.எம்.சியாம் தெரிவித்தார்.

மாவட்ட குற்ற புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலையடுத்து பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துமிந்த நயணசிறியின் வழிகாட்டலில் போதை வஸ்த்து ஒழிப்புப் பிரிவு பொறுப்பதிகாரி சியாம் தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த சுற்றிவளைப்பை மேற்கொண்டர்.

இதன்போது மதுபானப் போத்தல்கள் மற்றும் கசிப்பு போத்தல்களை கைப்பற்றியதுடன் 39 வயதுடைய பெண் ஒருவரையும் 49 வயதுடைய ஆண் ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நாவற்குடா நான்காம் குறுக்குத் தெருவில் வீடொன்றின் வெசாக் விடுமுறை காலத்தில் அதிக பணத்துக்கு விற்பனை செய்வதற்காக குப்பைகளுக்குள் பதுக்கி வைத்திருந்த 19 சிறிய சாராய போத்தல்கள் மற்றும் 18 பியர் ரின்களுடன் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டார்.

அதே பகுதியில் மற்றோர் இடத்தில் சட்டவிரோதமான முறையில் விற்பனைக்காக வைத்திருந்த 750 மில்லி லீற்றர் கசிப்பு போத்தலையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த சுற்றிவளைப்பில் உப பொலிஸ் பரிசோதகர் எம்.இஸ்ஹாக் பொலிஸ் உத்தியோகத்தர்களான ஜெயவீர தாஹா சந்திரகாசன் தனோஜன் ஆகியோர் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# உக்ரைனின் சகல நடவடிக்கைகளுக்கும் அமெரிக்காவும் நேட்டோவுமே பொறுப்பு!

## ரஷ்ய வெளியுறவு அமைச்சு குற்றச்சாட்டு

மொஸ்கோ, மே. 06

**உக்ரைன் ஆட்சியின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் பிற நேட்டோ நாடுகள் ஒட்டுமொத்தப் பொறுப்பாகும் என்று ரஷ்ய வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் மரியா ஜாகரோவா தெரிவித்துள்ளார்.**

"முதலில் மற்றும் முக்கியமாக, வோஷிங்டன், லண்டன் மற்றும் நேட்டோவைச் சேர்ந்த உக்ரைன் ஆட்சியின் படைப்பாளிகள் மற்றும் கையாளுப வர்கள், அது ஐஉக்ரைன்ஸ செய்யும் அனைத்திற்கும் ஒட்டுமொத்தப் பொறுப்பையும் ஏற்கிறார்கள்," என்று அவர் குறிப்பிட்டார்.

மேற்கத்திய நாடுகள் உக்ரைனின் சட்டபூர்வ மான அதிகாரிகளை ஒழித்துவிட்டன. சந்தர்ப்ப வாதிகள் மற்றும் கொள்ளைக்காரர்களை தலை மைப் பொறுப்பில் அமர்த்தியுள்ளன. பணம் மற் றும் ஆயுதங்களால் அவர்களுக்கு ஊக்கமளித்து, அவர்களுக்கு முழுமையான உரிமம் மற்றும் தண் டனையின்மை உணர்வை ஊட்டி, அவர்களுக்கு அரசியல் மறைப்பு மற்றும் இராணுவ ஆதரவை வழங்கியுள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

கடந்த புதன்கிழமை அதிகாலையில், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் அதிகாரபூர்வ கிரெம்ளின் இல்லத்தின் மீது உக்ரைன் ஆளில்லா விமானம் மூலம் தாக்குதல் நடத்த முயற்சித்தது. இராணுவ மற்றும் சிறப்பு சேவைகள் எதிரி சாத னங்களை விரைவாக முடக்கின. புடின் காயமடை



யவில்லை மற்றும் அவரது வழக்கமான அட்டவ ணைப்படி தொடர்ந்து வேலை செய்கிறார். கிரெம்ளின் இந்த சம்பவத்தை திட்டமிட்ட பயங் கரவாத தாக்குதல் மற்றும் அரச தலைவரை குறி வைத்து படுகொலை முயற்சி என்று கருதுகிறது. எங்கு, எப்போது பொருத்தமானது என்று கருதி னாலும் எதிர் நடவடிக்கைகளை எடுக்க ரஷ்யா வுக்கு உரிமை உள்ளது என்று அவர் தெரிவித்தார். (அ)



# பயங்கரவாதக் குழுவை சேர்ந்த 40 பேர் நைஜீரியாவில் கொலை!

அபுஜா, மே. 06

நைஜீரியா நாட்டில் பயங்கர வாத குழுக்களைச் சேர்ந்த 40 பேர் கொல்லப்பட்டதாக அந் நாட்டு அரச அதிகாரிகள் தெரி வித்துள்ளனர்.

அரசுக்கு எதிராக பயங்கர வாத குழுக்கள் செயல்பட்டு வருகிறது. இந்த குழுவை கட் டுப்படுத்த அரசு அதிரடி நடவ டிக்கை எடுத்து வருகிறது.

இதன்படி கடந்த 2 வாரங்க ளில் மேற்கொள்ளப்பட்ட அதி ரடி நடவடிக்கையில், 40 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

மேலும் அந்த குழுவினரின் குடும்பத்தினர் குழந்தைகள் உள் பட 510 பேர் அரசிடம் சரண் அடைந்து உள்ளதாக அறிவிக் கப்பட்டுள்ளது. (அ)

# உலகில் முதல் தடவையாக கருவில் உள்ள சிசுவுக்கு அறுவை சிகிச்சை!

## அமெரிக்க மருத்துவர்கள் சாதனை

நியூயோர்க், மே. 06

உலகில் முதன் முறையாக தாயின்வயிற்றில் இருந்த பொழுது குழந்தை ஒன்றுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. இச்சம்பவம் அமெரிக்காவில் பதிவாகியுள்ளது.

அமெரிக்காவின் லூசியானா வில் உள்ள பேடன் ரோக் நகரைச் சேர்ந்தவர் டெரெக்கின் மனைவி கென்யட்டா கோல்மன் கொடிய மரபணுக் நோயினால் பாதிக் கப்பட்டமையால் கர்ப்பமாக கென்யட்டாவின் வயிற்றிலிருந்த குழந்தையும் பாதிக்கப்பட்டுள் ளது.

இதனால் கென்யட்டா மருத் துவமனையில் அனுமதிக்கப் பட்ட நிலையில், வயிற்றில் இருக் கும் குழந்தைக்கு மூளை அறுவை சிகிச்சை செய்ய முடிவு செய்துள் ளனர்.

அவர் கர்ப்பமாகி 34 வாரங் கள் மற்றும் 2 நாட்களுக்குள் 10 பேர் அடங்கிய மருத்துவர்கள் குழுவினால் இந்த அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

அந்த வகையில், பிறக்காத அந்த குழந்தையின் மூளையில் வெட்டப்பட்டு, இரத்த ஓட் டத்தை கட்டுப்படுத்தும் தம னிக்கு அருகில் சுருளை பொருத் துவதற்கு நிபுணர்கள் அறுவை சிகிச்சை மேற்கொண்டுள்ளனர்.

வெற்றிகரமாக இந்த சிகிச்சை முடிக்கப்பட்ட பின்னர் பேசிய மருத்துவர்கள், 'இந்த அணுகு முறை கேலன் குறைபாட்டின்





நரம்புகளை நிர்வகிப்பதில் ஒரு முன்னுதாரண மாற்றத்தைக் குறிக்கும் திறனைக் கொண்டுள் ளது.

பிறப்புக்கு முந்தைய குறை பாட்டை சரி செய்துள்ளதாகவும் மற்றும் பிறந்த பின்னர் அதனை மாற்றுவதற்கு முயற்சிப்பதை விட, இதய செயலிழப்பை ஏற்ப டுவதற்கு முன்னரே தலைகீழாக மாற்றியுள்ளோம் என கூறியுள் ளனர்.

இதன் மூலம் குழந்தைகளி டையே நீண்டகால மூளை பாதிப்பு, இயலாமை அல்லது இறப்பு அபாயத்தை குறிப்பிடத்தக்க அளவில் குறைக்க உதவும் எனவும் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு, அறுவை சிகிச் சைக்கு பின்னர் அந்த குழந்தை நலமாக பிறந்துள்ளது. இது தொடர்பாக தாய் கென்யட்டா கூறுகையில், 'அவள் அழுவதை முதல் தடவையாக கேட்டதாக வும், அவளை கேட்டதாகவும் தொடவும் முடிந்ததுடன் அந்த நேரத்தில் பலவாறு உணர்ந்ததா கவும் அதற்கு வார்த்தைகள் இல்லை எனவும் கூறியுள்ளார்.

# ருவாண்டாவில் கனமழை; நிலச்சரிவில் 136 பேர் பலி!



கிகாலி, மே. 06

கிழக்கு ஆபிரிக்க நாடான ருவாண்டாவில் கடந்த ஒரு வாரத்திற்கும் மேல் கனமழை பெய்து வருகிறது.

ருவாண்டாவின் வடக்கு மற் றும் மேற்கு மாகாணங்களில் இடைவிடாமல் மழை பெய்து வருகிறது.

கனமழையினால் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி இதுவரை 136 பேர் பலியாகியுள்ளனர்.

மலை பிரதேசங்கள் மழையி னால் கடும் நிலச்சரிவை சந்தித் துள்ளன.

இந்த நிலையில், நிலச்சரிவில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணிகள் இடம்பெற்று வருவ தாக ருவாண்டா அரசு தெரிவித்துள்ளது.

ருவாண்டாவில் மழையினால் விவசாய நிலங்கள் கடுமையான பாதிப்பை சந்தித்துள்ளன. இதற் கிடையில், வரும் நாட்களில் ருவாண்டாவில் கனமழை பெய்ய இருப்பதாக அந்நாட்டு வானிலை மையம் எச்சரிக்கை விடுத்துள் ளது. ஈர நிலங்கள் மற்றும் பிற ஆபத்தான பகுதிகளில் வசிக்கும் மக்களை இடம்பெயருமாறு அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

ருவாண்டாவில் கடந்த சில ஆண்டுகளில் இடம்பெற்ற மிக மோசமான இயற்கை பேரிடர் பாதிப்பாக இது கருதப்படுகிறது.

அண்டை நாடான உகாண் டாவிலும் கனமழை பெய்து வருகிறது. மழையால் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 6 பேர் பலி யாகி உள்ளனர். (அ)

# ஜப்பானில் நிலநடுக்கம்!



ரோக்கியோ, மே. 06

ஜப்பானின் மத்திய பகுதியில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.3 ஆக பதிவா கியுள்ளதாக அமெரிக்க புவியி யல் ஆய்வு மையம் குறிப்பிட் டுள்ளது.

எனினும் சுனாமி எச்சரிக்கை எதுவும் வெளியிடப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஜப்பானின் பிரதான தீவான ஹொன்ஷூவின் மத்திய மேற்கு கடற்கரைக்கு அருகில் உள்ள இஷிகாவா மாகாணத்தில் பிற்பகல் 2:42 மணிக்கு 10 கி.மீ ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட் டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரபலமான சுற்றுலாத் தள மான நாகானோ மற்றும் கனா சாவா இடையே ஷிங்கன்சென் விரைவு ரயில் சேவைகள் நிறுத் தப்பட்டுள்ளன.

நிலநடுக்கத்தால் ஏற்பட்ட பாதிப்புக்கள் மற்றும் சேதங்கள் குறித்து இதுவரை எந்தவித தக வலும் வெளியாகவில்லை. (அ)

# மீதமுள்ள ஐ.பி.எல். போட்டிகளில் கே.எல்.ராகுல் விளையாடமாட்டார்!



லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் அணியின் தலைவரான கே.எல்.ராகுல், மீதமுள்ள ஐ.பி.எல். போட்டிகளில் விளையாடமாட்டார் என உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் அணியின் தலைவரான கே.எல்.ராகுல், பெங்களூர் அணிக்கு எதிரான போட்டியின் போது உபாதைக்குள்ளானார்.

களத்தடுப்பில் ஈடுபடும் போது அவருக்கு தொடையில் காயம் ஏற்பட்டது.

இந்தநிலையில், ஸ்கான் பரிசோதனைக்காக கே.எல்.ராகுல் மும்பைக்கு சென்றிருந்தார்.

இதன்போது, அவருக்கு அறுவை சிகிச்சை மேற்கொள் ளப்பட வேண்டும் என வைத் தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து, கே.எல்.ராகுல் மீதமுள்ள ஐ.பி.எல். போட்டிகளில் விளையாடமாட்டார் என லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் அணி நிர்வாகம் அறிவித்துள்ளது.

# கரப்பந்தாட்டம், கபடி ஆகியவற்றுக்கு இளைஞர் சேவை மன்றத்தின் இலவச பயிற்சி

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் நடத்தப்படவுள்ள கரப்பந்தாட்டம், கடற்கரை கரப்பந்தாட்டம் மற்றும் கபடி ஆகிய விளையாட்டுகளுக்கான தங்குமுகாம் பயிற்சி வேலைத்திட்டத்தில் வீர, வீராங்கனைகளை இணைத்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் 8ஆம் திகதி காலை 9 மணிக்கு மஹரகமவில் உள்ள இளைஞர் சேவைகள் மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சையின் போது தெரிவுசெய்யப்படுபவர்கள், தங்குமுகாம் பயிற்சி காலத்தின்போது, தங்குமிட வசதிகள் உள்ளிட்ட ஏனைய வசதிகள் என்பன இலவசமாக கொடுக்கப்படும் என தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் குறிப்பிடுகிறது.

கரப்பந்தாட்டம் மற்றும் கடற்கரை கரப்பந்தாட்ட குழாம்களில் இணைவதற்கு எதிர்பார்த்துள்ள ஆண்கள் 20 வயதுக்குட்பட்ட 182 சென்ரீ மீற்றர் உயரத்தை உடையவர்களாக இருக்க வேண்டியது அவசியம். அதேபோல், பெண்கள் 20 வயதுக்குட்பட்ட 172 சென்ரீ மீற்றர் உயரத்தை உடையவர்களாக இருக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், கபடி குழாமில் இணைவதற்கு எதிர்பார்த்து உள்ளவர்கள் 20 வயதுக்கு உட்பட்டவர்களாக இருக்க வேண்டியதுடன், ஆண்கள் 175 சென்ரீ மீற்றர் உயரத்தையும், பெண்கள் 172 சென்ரீ மீற்றர் உயரத்தையும் உடையவர்களாக இருப்பது கட்டாயமாகும். அத்துடன், க.பொ.த. சாதாரண தரம் வரை கல்வி பயின்றிருப்பது அவசியமாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.




# யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் இடம்பெற்ற ரென்னிஸ் போட்டி முடிவுகள்

அகில இலங்கை டென்னிஸ் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக நடத்தும் 14 வயதுக்கும் 18 வயதுக்கும் கீழ்ப்பட்ட ஆண் - பெண் தனிநபர் பங்குபற்றும் தேசிய மட்டத்திலான ரென்னிஸ் போட்டிகள் கடந்த ஏப்ரல் 28, 29, 30ஆம் திகதிகளில் புனித பத்திரிசியார் கல்லூரி, பரியோவான் கல்லூரி ரென்னிஸ் திடல்களில் நடை பெற்றன.

இப்போட்டிகளில் கொழும்பு, குருநாகல், மட்டக்களப்பு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலிருந்து ஆண், பெண் மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர்.

14 வயதுக்கு கீழ்ப்பட்ட ஆண்களுக்கான சுற்றுப் போட்டியில் றமோன் சிறிதரன் (கொழும்பு) 1ஆம் இடத்தையும், செனோன் அன்டர்சன் (குருநாகல்) 2ஆம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

18 வயதுக்கு கீழ்ப்பட்ட பெண்களுக்கான சுற்றுப் போட்டியில் யெசாலி ஜெயக்கொடி (கொழும்பு) 1ஆம் இடத்தையும், பிறஜினா சுரேஷ் (யாழ்ப்பாணம்) 2ஆம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

18 வயதுக்கு கீழ்ப்பட்ட ஆண்களுக்கான சுற்றுப் போட்டியில் வெற்றிபெற்ற கனுக பெர்னாண்டோ (கொழும்பு), மயூரன் குபேரன் (கொழும்பு) ஆகியோர் இறுதிப் போட்டிக்கு தெரிவாகினர்.

அதனையடுத்து, வெற்றியாளர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வுகள் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் அதிபர் அருட்திரு அ.பீ. திருமகன் தலைமையில் கடந்த ஏப்ரல் 30ஆம் திகதி மாலை 5.30 மணியளவில் நடைபெற்றது.



பங்களாதேஷ் அணிக்கு எதிரான போட்டி:

# இலங்கை மகளிர் அணி 58 ஓட்டங்களால் வெற்றி

பங்களாதேஷ் மகளிர் அணிக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இலங்கை மகளிர் அணி 58 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை மகளிர் அணி மட்டுப்படுத்தப்பட்ட 30 ஓவர்களில் 5 விக்கட்களை இழந்து 186 ஓட்டங்களை பெற்றது.

அணித்தலைவி சமரி அத்தபத்து 64 ஓட்டங்களை பெற்றார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் மகளிர் அணி 09 விக்கட்களை இழந்து 128 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

# ஹைதராபத்தை 5 ஓட்டங்களால் வென்றது கொல்கத்தா



ஹைதராபத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற சன்ரைசர்ஸ் ஹைதராபாத்துக்கு எதிரான ஐபிஎல் போட்டியின் கடைசி ஓவரை வருண் சக்கரவர்த்தி மிகவும் சாமர்த்தியமாக வீசியதன் பலனாக கொல்கத்தா நைட் ரைடர்ஸ் 5 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

கொல்கத்தா நைட் ரைடர்ஸனால் நிர்ணியிக்கப்பட்ட 172 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஹைதராபாத் 20 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 166 ஓட்டங்களைப் பெற்று தோல்வி அடைந்தது.

கடைசி ஓவரில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத்தின் வெற்றிக்கு 9 ஓட்டங்கள் தேவைப்பட, சுழல் பந்துவீச்சாளர் வருண் சக்கரவர்த்தி மிகவும் சாமர்த்தியமாக பந்துவீசி ஒரு வீக்கெட்டைக் கைப்பற்றியதுடன் ஒரு உதிரி உட்பட 3 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து கொல்கத்தா நைட் ரைடர்ஸுக்கு பரபரப்பான வெற்றியை ஈட்டிக் கொடுத்தார்.

இப் போட்டியில் சவால் மிக்க சந்தர்ப்பங்களில் 4 ஓவர்களை வீசி 20 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து ஒரு விக்கெட்டைக் கைப்பற்றிய வருண் சக்கரவர்த்திக்கு ஆட்டநாயகன் விருது வழங்கப்பட்டது.

சன்ரைசர்ஸ் ஹைதராபாத் 7ஆவது ஓவரில் 4ஆவது விக்கெட்டை இழந்தபோது அதன் மொத்த எண்ணிக்கை 54 ஓட்டங்களாக இருந்தது.

ஆனால், தென்னாபிரிக்கர்களான ஏய்டன் மார்க் ராமும் ஹென்றி க்ளாசெனும் 5ஆவது விக்கெட்டில் 79 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியை ஒரளவு பலப்படுத்தினர்.

எனினும் 17ஆவது ஓவரில் மார்க்ராம் களம் விட்டகன்றதும் ஆட்டம் கொல்கத்தா பக்கம் திரும்பியது.

இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் 20 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து 171 ஓட்டங்களைப் பெற்றது.

கொல்கத்தாவின் முன்வரிசை வீரர்கள் மூவர் ஆட்டம் இழந்தபோது மொத்த எண்ணிக்கை 35 ஓட்டங்களாக இருந்தது.

இந் நிலையில் அணித் தலைவர் நிட்டிஷ் ராணா, ரின்கு சிங் ஆகிய இருவரும் 4ஆவது விக்கெட்டில் 61 ஓட்டங்களைப் பகிர்ந்து சரிவைத் தடுத்தனர். தொடர்ந்து அண்ட்ரே ரசல், அனுக்குல் ரோய் ஆகிய இருவரும் தங்களாலான அதிகபட்ச பங்களிப்பை வழங்கி அணியின் மொத்த எண்ணிக்கைக்கு பலம் சேர்த்தனர்.

# யாழில் ஓட்டோ சாரதிகளிடம் நூதனமாகத் திருடும் கும்பல்!

## ஒரே நாளில் இரண்டு சம்பவம்

யாழ்ப்பாணம், மே. 06

**யாழ்ப்பாண மாவட்டத்தில் பயணிகள் போல் பாசாங்கு செய்து ஓட்டோச் சாரதிகளிடம் நூதனமாக பணம் மற்றும் நகைகளைத் திருடிச் சென்ற இரண்டு சம்பவங்கள் ஒரே நாளில் பதிவாகியுள்ளன.**

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட ஓட்டோச் சாரதிகளால் காங்கேசன்துறை மற்றும் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் வெவ்வேறாக முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

குறித்த ஓட்டோச் சாரதிகள் இருவரும் தெல்லிப்பழை மற்றும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் பகல் பருத்தித்துறையில் இருந்து ஓட்டோ ஒன்றை வாடகைக்கு அமர்த்தி கீரிமலையில் உள்ள காணிகளைப் பார்க்கவெனக் கூறி வந்த ஒரு பெண்ணும் இரண்டு ஆண்களும் குறித்த திருட்டில் ஈடுபட்டுள்ளனர்.

கீரிமலையில் ஓட்டோச் சாரதிக்கு குளிர்பானத்துக்குள் மயக்க மருந்து கலந்துகொடுத்து விட்டு சாரதியிடம் இருந்த பணம் மற்றும் நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர்.

அதே கும்பல் மற்றொரு ஓட்டோவை கீரிமலையில் இருந்து வாடகைக்கு அமர்த்தி பருத்தித்துறைக்குச் செல்லும் வழியில் குறித்த சாரதிக்கும் குளிர்பானத்துக்குள் மயக்க மருந்து கலந்து கொடுத்து விட்டு சாரதியிடம் இருந்த பணம் மற்றும் நகைகளை திருடிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் காங்கேசன்துறை மற்றும் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

ஒரே நாளில் ஒரே கும்பல் இரு வேறு நூதனத் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டமை பலரிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஓட்டோச் சாரதிகள் குறித்த விடயம் தொடர்பில் அவதானத்துடன் செயற்படுவது திருட்டுக்களை தடுக்க உதவும் எனக் கூறப்படுகிறது.

(அ)

# யாழ்.மறை மாவட்ட ஆயருடன் அமைச்சர் டக்ளஸ் சந்திப்பு



யாழ்ப்பாணம், மே. 06

யாழ்.மறைமாவட்ட ஆயர் கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையை சந்தித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சமகால அரசியல் நிலைவரங்கள் மற்றும் முன்னெடுக்கப்படும் அரசியல் நலத்திட்டங்கள் எடுத்துரைத்தார்.

இச்சந்திப்பில் கடற்றொழில் அமைச்சரின் பிரத்தியேக செயலாளரன கே. தயானந்தாவும் கலந்துகொண்டார்.

(அ)

# கொரோனா தொற்றாளர் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, மே. 06

நாட்டில் மேலும் 6 பேருக்கு கொவிட்-19 தொற்றுறுதியாகியுள்ளது.

கடந்த சில தினங்களாக கோவிட்-19 தொற்றுறுதியாகின்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

இதன்படி, கடந்த 3 தினங்களுக்குள் தொற்றுறுதியான 15 இற்கும் மேற்பட்டோர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என அரசாங்க தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (அ)

# வவுனியா சிறையில் இருந்து 15 கைதிகள் நேற்று விடுதலை




வவுனியா, மே. 06

வெசாக் தினத்தினை முன்னிட்டு வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் இருந்து 15 கைதிகள் பொதுமன்னிப்பில் விடுதலை செய்யப்பட்டனர்.

நேற்று வெசாக் தினத்தையொட்டி நாடளாவிய ரீதியாக 988 சிறைக்கைதிகள் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்திருந்தது.

அதற்கமைய வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் இருந்து சிறு குற்றங்களைப் புரிந்த மற்றும் தண்டப்பணத்தைச் செலுத்த முடியாத 15 பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

அவர்கள் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் அதிகாரிகள் முன்னிலையில் நேற்று விடுவிக்கப்பட்டனர்

இதேவேளை, நேற்றும் இன்றும் சிறைக்கைதிகளை சந்திப்பதற்கு அவர்களது உறவினர்களுக்கு விசேட சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# இளங்கோ அடிகளின் நினைவு வவுனியாவில்



வவுனியா, மே. 06

தமிழில் தோன்றிய முதல் காப்பியமான சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோ அடிகள் சித்திரை முழுநிலா நாளில் நினைவு கூரப்படுகின்றார்.

அந்தவகையில் வவுனியா சின்னப்புதுக்குளம், சிவன் கோவிலுக்கு அருகிலுள்ள இளங்கோ அடிகளின் திருவுருவச் சிலைக்கருகிலும் இந்த நினைவு நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இதன்போது இளங்கோ அடிகளின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், சிறப்புரைகளும் இடம்பெற்றன.

வவுனியா நகரசபை செயலாளர் திருமதி நிமலவேணி நிசங்க தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வடமாகாண முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஜி. ரி. லிங்கநாதன், தமிழருவி சிவகுமாரன், தமிழ்விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார், பொதுமக்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

(அ)

# காடழிப்பை வெளிப்படுத்திய வவுனியா ஆசிரியருக்கு அவதூறு ஏற்படுத்திய கிராம சேகவர் மீது விசாரணை!

வவுனியா, மே. 06

காடழிப்பை வெளிக்கொண்டு வந்த ஆசிரியருக்கு எதிராக போலி முகநூல் மூலம் அவதூறை ஏற்படுத்தியது கிராம சேவகர் என உறுதிப்படுத் தப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பில் விசாரணைகள் இடம்பெறுவதாகவும் வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, கட்டையர்குளம் பகுதியில் வன இலாகாவுக்குச் சொந்தமான காட்டில் கிராம அலுவலர் உள்ளடங்கலாக சிலர் காடழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதனை அப் பகுதி கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் தடுத்து நிறுத்தியதுடன், குறித்த விடயம் தொடர்பில் அரச அதிபர், வவுனியா பிரதேச செயலாளார், வன இலாகா திணைக்களம், பொலிஸார் ஆகியோரின் கவனத்திற்கும் கொண்டு சென்றதுடன் ஊடகங்களுக்கும் தெரியப்படுத்தியிருந்தனர்.

இதனையடுத்து, கிராம அபிவிருத்திச் சங்கம் சார்பாக செயற்பட்ட அப் பகுதியைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவருக்கு கிராம அலுவலர் ஒருவர் தொலைபேசியில் அச்சுறுத்தியதாக பாதிக்கப்பட்ட ஆசிரியர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

குறித்த ஆசிரியருக்கு எதிராக போலி முகநூல்களில் அவதூறும் பரப்பப்பட்டுள்ளது. இதனையடுத்து, பாதிக்கப்பட்ட ஆசிரியர் வவுனியா தொழில்நுட்ப குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்ததுடன், கொழும்பு இலத்திரனியல் குற்றவியல் பிரிவுக்கும் முறைப்பாடு செய்திருந்தார்.

விசாரணைகளை முன்னெடுத்த வவுனியா தொழில்நுட்ப குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் குறித்த போலி முகநூல்கள் கிராம அலுவலர் ஒருவருடையது எனத் தெரிவித்துள்ளதுடன், அவரை அழைத்து வாக்குமூலத்தையும் பெற்றுள்ளனர். இது தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் பொலிஸார் மேலும் கூறினர்.

இதேவேளை, வனஇலாகா திணைக்களத்தாலும் கிராம அலுவலருக்கு எதிராக வவுனியா நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளபோதும், குறித்த அலுவலர் தொடர்பில் பிரதேச செயலாளர் முறையான நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் பொது மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

(அ)

## தமிழ் கட்சிகள்...

இந்தியா தனது பாதுகாப்பையும் தமிழ் மக்களினது உரிமைகளையும் உறுதிப்படுத்துவதற்கு மேலும் மேலும் இலங்கைக்கு அழுத்தங்களை கொடுக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் சிறிசபாரத்தினத்தின் 37ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று மட்டக் களப்பில் அனுஷ்டிக்கப்பட்டது. இதில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்ட வாறு கூறினார். சிறிசபாரத்தினம் ஒற்று மையாக நாங்கள் செயற்பட்டு தமிழ் மக்களின் உரிமைகளைப் பெறவேண் டும் என்ற எண்ணத்துடன் இருந்தாரோ அதே நோக்கத்துடன் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தற்போதைய தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஒற்று மையை முன்னிறுத்தி வருகின்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உரு வாக்கப்பட்ட காலமிருந்து இன்று வரையுள்ள கட்சியாக ஓர் இயக்கமாக தமிழீழ விடுதலை இயக்கம் இருக்கின் றது. நாங்கள் எங்கள் தலைவரை இழந்தாலும் கூட தமிழீழ விடுதலைப் புலிகளுடன் கடந்த கால கசப்பான சம்ப வங்களை மறந்து தமிழ் மக்களுக்காக நாங் கள் ஒன்றாகச் செயல்படுவோம் என்று உறுதியாக செயற்பட்டு வருகின்றோம்.

2009ஆம் ஆண்டு ஆயுதப் போராட் டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் தமிழ் மக்கள் இக்கட்டான சூழ்நிலையில் எந்தப் பலமும் இல்லாத நிர்க்கதியாக நிற்கும் இந்தவேளையில்- நாங்கள் பலமாக ஒற்றுமையாக இருக்க வேண்டிய நேரத்தில் தமிழ் மக்கள் மத்தி யில் பல பிளவுகள் காணப்படுகின்றன.

இன்று வடக்கு-கிழக்கில் ஆயுத பலம் இல்லாத காரணத்தினால் இலங்கை அரசாங்கத்தினால் எமது நிலங்கள் கபளீகரம் செய்யப்பட்டு வருகின்றன. தினமும் வடக்கு-கிழக்கு பகுதிகளில் சிங்கள பௌத்தமயமாக்கும் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

1987ஆம் ஆண்டு இலங்கை-இந்திய ஒப்பந்தம் மூலம் உருவாக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாண சபையின் நேற்று அதிகாரங்கள் இல்லாமல் ஆளு நர்களின் ஆட்சியின் கீழ் இருக்கின்றது. ஜனாதிபதியின் நேரடி பிரதிநிதியாக இருக்கும் ஆளுநர்கள் தாங்கள் நினைத்த வற்றைச் செய்துகொண்டிருக்கின்றார் கள். நூறு வீதம் தமிழர்கள் வாழும் வடக்கின் தையிட்டி பகுதியிலேயே விகாரை அமைக்கும் பணிகள் முன்னெ டுக்கப்பட்டுள்ளன.

இதேபோன்று எமது கிழக்கு மாகாணத்தில் உள்ள புராதன இடங்க ளான கன்னியா, திருக்கோணேஸ்வரம், குசனார்மலை போன்ற பகுதிகளிலும் வடக்கில் வெடுக்குநாறி,குருந்தூர் மலை, நாவற்குழி போன்ற இடங்களில் பௌத்த மதம் என்று கூறிக்கொண்டு கபளீகரம் செய்யப்பட்டு வருகின்றன.

இந்திய அரசாங்கமானது 13ஆவது திருத்தத்தின் மூலம் கொண்டுவரப்பட்ட மாகாண சபையின் முழு அதிகாரத்தை யும் பரவலாக்கி மாகாண சபைத் தேர் தலை நடத்தவேண்டும் என்ற அழுத் தத்தை வழங்கவேண்டும். ஆனால், எங்களுக்குள் ஒற்றுமையில்லை.

சரத் வீரசேகர, விமல் வீரவன்ஸ போன்ற இனவாதிகள் 13ஆவது திருத்த சட்டமும் வேண்டாம் அதன் ஊடாக வந்த மாகாண சபையும் வேண்டாம் என்கிறார்கள்.வடக்கு-கிழக்கில் அதே கொள்கையுடன் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் செயற்படுகின்றது.

ஆனால், இருப்பதையாவது காப்பாற் றிக்கொள்ளவேண்டுமானால் மாகாண சபையின் முழு அதிகாரங்களும் பரவலாக்கப்பட்டு மாகாணசபைத் தேர்தல் மிக விரைவாக நடத்தப்பட வேண்டும் என்பதில் உறுதியாகயிருக் கின்றோம்.

நாங்கள் இன்று ஒன்றாகயிருக்க வேண்டிய காலம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூட இன்று பிரிந்து கிடக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து சென்ற கட்சிகள் அனைத்தும் ஒன்றாகி நாங்கள் எமது உரிமைகளை பெறுவதற்காக போராடவேண்டிய ஓர் இக்கட்டான சூழ்நிலையில் நாங்கள் இருக்கின்றோம் என்பதை அனைத்து தமிழ்த் தரப்பி னரும் உணரவேண்டும்.

மக்களுக்காகவே கட்சியே தவிர கட்சியை வளர்ப்பதற்காக மக்களைப் பகடைக்காய்களாக பயன்படுத்தாமல் அனைவரும் ஒன்றாக இணைந்து தமிழ் மக்களுக்கு எதிரான அனைத்து விதமான அட்டூழியங்களையும் அனைவரும் இணைந்து எதிர்கொள்ளவேண்டும்.

சிறிசபாரத்தினம் 1984ஆம் ஆண்டு ஜேர்மனியில் வைத்து கூறியிருந்தார், தமிழ் மக்களின் உரிமைப்போராட்டம் என்பது இந்தியாவின் பாதுகாப்புடன் பின்னிப் பிணைந்துள்ளது என்று. ஆனால் இன்று தமிழ் மக்கள் ஆயுதப் போராட்டம் அற்ற நிலையிலிருக்கின் றோம். அரசியல் ரீதியாக பலமற்ற நிலையில் உள்ளோம். நாங்கள் இந்தியாவை நம்பியிருக்கின்றோம்.

இந்தியாவின் பாதுகாப்பு இலங்கை யைப் பொறுத்தவரை கேள்விக்குறி யாகிக்கொண்டிருப்பதை இந்தியாகூட உணராமல் இருக்கின்றதா?அல்லது உணர்ந்துகொண்டு காலம் தாழ்த்திக் கொண்டிருக்கின்றதா என்பதைச் சிந்திக்கவேண்டும்.

இலங்கையைப் பொறுத்த வரையில் இன்று சீனா அகலக்கால் பதித்து வரு கின்றது. அம்பாந்தோட்டை,கொழும்பு போன்ற பகுதிகளிலும் காலூன்றிய நிலையில் வடக்கு-கிழக்கிலும் காலூன்ற எத்தனிக்கின்றனர்.வடக்கில் காலை வைத்துவிட்டார்கள்.

இந்தியா தனது பாதுகாப்பையும் தமிழ் மக்களினது உரிமைகளையும் உறுதிப்படுத்துவதற்கு மேலும்மேலும் இலங்கைக்கு அழுத்தங்களை கொடுக்க வேண்டும். பொருளாதார ரீதியாக மீட்சி பெறுவதற்கு உதவிய இந்தியா,தமிழ் மக்களின் உரிமையினை பாதுகாப்ப தற்கு முழு அதிகாரத்தையும் பரவலாக்கி மாகாணசபை தேர்தலை மிக விரைவாக நடத்துதற்கு உறுதி செய்யவேண்டும்- என்றார். (அ)

## பொதுநலவாய...

பொதுநலவாய தலைவர்கள் மாநாட் டில் ஜனாதிபதி பங்கேற்றுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித் துள்ளது.

அதேநேரம், ருவண்டா ஜனாதிபதி போல் ககாமையும், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க லண்டனில் சந்தித்துள்ளார்.

இதன்போது, இதுதரப்பு முக்கியத்து வம் வாய்ந்த பல விடயங்கள் கலந்துரை யாடப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

## நிதி...

தற்போது குறைவடைந்துள்ள போதும், நிதிக் கொள்கைகள் ஊடாக பணவீக்க த்தை கட்டுப்படுத்த வேண்டும் என கிருஷ்ணா ஸ்ரீநிவாசன் வலியுறுத் தினார்.

கடனை ஸ்திரமான நிலைக்குக் கொண்டு வருதல், இலங்கையில் காணப் படும் பாரிய சவால் என குறிப்பிட்டுள்ள அவர், உள்நாட்டு கடன் மறுசீர மைப்பை மேற்கொள்ள தீர்மானித்தால், நாட்டின் நிதி ஸ்திர நிலைமையை பாது காக்கும் வகையிலேயே அதனை மேற் கொள்ளவேண்டும் எனவும் கூறினார். (அ)

## மழை...

காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவாகி இலங்கை ஊடாக காற்று கடக்கும் என வும், இதன் காரணமாக நாட்டின் தென்மேற்குப் பகுதியில் மழை பெய்யக் கூடும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் மெரில் மென்டிஸ் தெரிவித்தார்.

இதன்படி, மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் மழையுடனான வானிலையில் அதிக ரிப்பு ஏற்படக்கூடும் என பிரதிப் பணிப் பாளர் கூறினார். (அ)

## மகிந்த...

இயக்கத்தின் அலுவலகத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற் கண்டவாறு கூறி னார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாணய நிதியம் பணம் கொடுப்பது சம்பந்தமாக சில நிபந்தனைகளை விதித் துள்ளது. அந்த நிபந்தனைகளில் ஊழல் கள் விசாரிக்கப்படவேண்டும் என தெரி விக்கப்பட்டுள்ளது. அதிலும் மகிந்த ராஜபக்ஷ குடும்பத்தின் ஊழல் காரண மாகத்தான் இந்த நாடு மிகவும் மோச மான நிலைக்குத் தள்ளப்பட்டது.

## ஜனாதிபதி...

ராஜபக்ஷர்களுக்கும் சார்பாகவே செயற் படுகிறார்கள்.

மே தினக் கூட்டம் தொடர்பில் கடந்த வாரம் அரசியல் கட்சி பிரதிநிதிக ளுக்கும், பொலிஸ் அதிகாரிகளுக்கும் இடையிலான பேச்சு பொலிஸ் தலைமையகத்தில் இடம்பெற்றது.

பிரதான வீதியை மறித்து மேடை அமைத்து கூட்டத்தை நடத்த எந்த அரசியல் கட்சிக்கும் அனுமதி வழங்க முடியாது என பாதுகாப்புத் தரப்பினர் உறுதியாக குறிப்பிட்ட பின்னணியில், ஓர் அரசியல் கட்சிக்கு மாத்திரம் எவ் வாறு நடு வீதியில் மேடையமைக்க அனுமதி வழங்கப்பட்டது என்பது பிரச் னைக்குரியதாக உள்ளது.

பாராளுமன்றத்தை சுற்றி வளைக்கும் வகையில் மக்களை தவறாக வழி நடத் திய அரசியல் கட்சிக்கு எதிரான விசார ணைகளை முன்னெடுக்குமாறு பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடளித் தோம்.

இதுவரை இந்த முறைப்பாடு தொடர்பில் உரிய அரசியல் கட்சி பிரதிநிதிகளிடமிருந்து வாக்குமூலம் பெற்றுக்கொள்ளப்படவில்லை.

ஆட்சி அதிகாரம் இல்லாத நிலையில் இந்த அரசியல் கட்சி முறையற்ற வகை யில் செயற்படும் போது அதிகாரம் கிடைத்து விட்டால் இவர்கள் நாட்டின் சட்டம் மற்றும் ஒழுங்கை எவ்வாறு பாதுகாப்பார்கள் என்பதை மக்கள் ஆராய வேண்டும்.

பொதுஜன பெரமுனவின் மே தினக் கூட்டத்தில் எமது தலைமைத்துவத்தை வெளிப்படுத்தினோம்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் ஆலோசனைகளுக்கு அமைய அரசியல் தீர்மானங்களை எடுத்து முன்னோக்கிச் செல்வோம். பொதுஜன பெரமுனவின் உறுப் பினர் ஒருவரையே ஜனாதிபதி வேட்ப ாளராக களமிறக்குவோம். அவர் முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவாக இருக்கலாம். ராஜபக்ஷர் கள் மீண்டும் ஆட்சியதிகாரத்தை கைப்பற்றுவார்கள் - என்றார். (அ)

## ஜனாதிபதி நாடு...

தகவல்கள் வெளியாகின.

ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர், ஆளுநர் பதவிக ளைக் கோரியுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

மாகாண சபைகள் கலைக்கப்பட்ட தன் பின்னர், அவற்றின் நிர்வாகம் ஆளு நர்களின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்த நிலையில், ஆளுநர் பதவியிலி ருந்து விலகுமாறு, ஜனாதிபதி செயலகத் தின் உயர் அதிகாரி ஒருவர், தம்மை தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு தெரிவித்ததாக, கிழக்கு மாகாண ஆளு நர் அநுராதா யஹம்பத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் வெளிநாட்டு விஜயத் தின் பின்னர், ஆளுநர் பதவிகளில் மாற்ற ம் ஏற்படுத்தப்பட உள்ளதால், தம்மை பதவி விலகுமாறு, ஜனாதிபதி செயல கத்தின் குறித்த உயரதிகாரி தமக்கு அறி வித்ததாகவும், கிழக்கு மாகாண ஆளுநர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறிருப்பினும், ஏனைய மாகாண ஆளுநர்களுக்கு இதுபோன்ற அறிவித்தல் விடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப் படுகின்றது. (அ)

ஆகவே இந்த ஊழலை விசாரிக்காத பட்சத்தில் நாடு மிகவும் மோசமான சூழ லில் அதாவது பின் தங்கிய நிலையில் தொடர்ந்து செல்லும் வாய்ப்புகள் இருக் கின்றன.

ஆகவே மகிந்த ராஜபக்ஷ குடும்பம் இந்த ஊழல் செயற்பாடுகள் மூலம் நாட் டில் பொருளாதார வீழ்ச்சியை கொண்டு வந்து இன்றும் நடமாடிக்கொண்டிருக் கும் அவர்கள் மீதான ஊழல் குற்றச்சாட் டுகள் அனைத்தும் விசாரணை செய்யப் படவேண்டும் என்பதை ஜனாதிபதியி டம் கோரிக்கையாக முன் வைக்கிறோம்.

அப்படி இல்லை என்றால் இங்கு முத லீடு செய்யப்பட்ட வங்கிகளின் பணங் கள் எல்லாம் இந்த கடனுக்காக எடுக்கப் பட்டு மிக மோசமான ஒரு சூழல் ஏற் படக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

ஆகவே ஊழலை விசாரிப்பதன் ஊடா கத்தான் இந்த நாட்டில் முன்னேற்றகர மான செயற்பாடுகளைச் செய்ய முடியும்.

ஜனாதிபதி இனப்பிரச்னைக்கு இவ் வருடத்துக்குள் தீர்வு என மீண்டும் அறி விக்கத் தொடங்கி இருக்கிறார்.

எங்களை பொறுத்தவரை தீர்வு என் பது எப்படி கிடைக்கும் என்பது கேள் விக்குறியாகத் தான் இருக்கிறது. அந்தக் கேள்வியை ஜனாதிபதியிடமே நாங்கள் கேட்கின்றோம்.

வடக்கு-கிழக்கில் தமிழர்களின் பூர் வீக நிலங்கள் அபகரிக்கப்படுகின்ற வேலை தொடர்ச்சியாக இடம்பெறுகின் றது. அது புத்தசாசன அமைச்சாக இருக் கலாம், வனவள திணைக்களமாக இருக் கலாம், வன ஜீவராசிகள் திணைக்கள மாக இருக்கலாம். இப்படி திணைக்களங் களிடம் அதிகாரங்களை கொடுத்து விட்டு இனப்பிரச்னைக்கு தீர்வு என்பது எப்படி சாத்தியமாகும்? - என்றார். (அ)

## நூற்றுக்கும்...

இம்மாவட்டங்களில் கடும் மழை, காற்று , மரம் முறிந்து விழுந்தமை , மின் னல் தாக்கம் என்பவற்றால் 110 குடும் பங்களைச் சேர்ந்த 437 பேர் பாதிக்கப் பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை பதுளை , காலி , கேகாலை , மாத்தளை , மாத்தறை மாவட்டங்க ளுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கையும் நீடிக்கப்பட்டுள்ளது.

பதுளை மாவட்டத்தில் பதுளை, ஹல்துமுல்லை, ஹாலிஎல, பசறை பிர தேச செயலகப்பிரிவுகளுக்கும் , காலி யில் பத்தேகம, யக்கலமுல்ல, எல்பிட்டி மற்றும் நாகொட பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும் மண்சரிவு அபாய எச்ச ரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதே போன்று கேகாலையில் கேகாலை பிரதேச செயலகப்பிரிவுக்கும் , மாத்தளையில் பல்லேபொல பிரதேச செயலகப்பிரிவுக்கும், மாத்தறையில் கொடபொல மற்றும் பஸ்கொட பிர தேச செயலகப்பிரிவுக்கும் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள தாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவ னம் தெரிவித்துள்ளது.

## கடும்...

என போராட்டக்காரர்கள் பதாகை களை தாங்கியவாறு போராட்டத்தில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த எதிர்ப்புப் போராட்டம் தொடர்ச்சியாக இடம்பெறலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

14 குடும்பங்களுக்கு சொந்தமான அண்ணளவாக 100 பரப்பு காணியை விடுவிக்கக் கோரியும் சட்டவிரோதமாக கட்டப்பட்ட பௌத்தக் கட்டுமானத்தை அகற்றக் கோரியும் பௌத்த மயமாக்கல் திணிப்பை எதிர்த்தும் போராட்டக்காரர் கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சட்டவிரோதமாக கட்டப்பட்ட தையிட்டி விகாரையை அகற்றுமாறு கோரி கடந்த புதன்கிழமை போராட் டம் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலை யில், அதன் தொடர்ச்சியாக மூன்று நாட்களுக்கு முன்னெடுக்கத் தீர்மானிக் கப்பட்டது. (அ)

ஈழநாடு
Eelanadu

# மேலும் 13 பேருக்கு கொரோனா!

கொழும்பு, மே. 06

நாட்டில் கொரோனா தொற்று உறுதியான மேலும் 13 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் கடந்த 24 மணித்தியாலங்களில் அடையாளம் காணப்பட்டதாக குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, இதுவரையில் நாட்டில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 672,207 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் நேற்றைய தினம் கொரோனா மரணங்கள் எதுவும் பதிவாகவில்லை எனவும் சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)



## தையிட்டி போராட்டக்களத்தில் புலனாய்வாளர்களால் குழப்பம்!

யாழ்ப்பாணம், மே. 06

தையிட்டி பகுதியில் விகாரை அமைத்தமைக்கு எதிராக இடம் பெற்றுவரும் போராட்டக்களத்தில் நேற்று புலனாய்வாளர்கள் உள்நுழைந்தமையால் குழப்ப நிலை ஏற்பட்டது.

போராட்டம் நடத்துவதற்கு அமைக்கப்பட்ட கொட்டகையினுள் சென்ற அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் இளைஞர்களிடம், போராட்டத்தில் ஈடுபட்டால் கடுமையான தண்டனைகளை அனுபவிக்க வேண்டிவரும். போராட்டக்களத்திற்கு முன்னே செல்லக்கூடாது என பல்வேறு விடயங்களைக் கூறி அவர்களை மிரட்டித் திசை திருப்ப முயன்றனர்.

இவ்வாறு திசை திருப்ப முற்பட்டபோது அருகில் இருந்தவர்கள் அவர்களை அவ்விடத்திலிருந்து வெளியே அகற்றினர். இதனால் அவ்விடத்தில் சிறிது நேரம் பதற்றம் ஏற்பட்டது. (அ)

# மூன்று வகையாக பிரிக்கப்படும் எரிபொருள் நிரப்பு நிலையங்கள்

கொழும்பு, மே. 06

இலங்கையில் எரிபொருள் இறக்குமதி, விநியோகம் மற்றும் சந்தைப்படுத்தல் வர்த்தகத்தில் இணையும் மூன்று வெளிநாட்டு நிறுவனங்களுக்காக 350 எரிபொருள் நிரப்பு நிலையங்கள், தலா 150 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் என மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

தற்போது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து பணியாற்றும் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களுடன் விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று கொழும்பு பவுண்டேஷன் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

புதிய நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்வதன் மூலம் எரிபொருள் கூடம் உரிமையாளர்கள் மற்றும் எரிபொருள் நுகர்வோருக்கு நன்மை பயக்கும் முடிவுகள் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்வலு மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர்களான இந்திக அனுருத்த, டி.வி.சானக்க உட்பட மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகள் பெருமளவானோர் இந் நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ)

# சக மனிதரிடத்தில் சகிப்புத்தன்மை மனிதாபிமானத்தை பின்பற்றுங்கள்

### வெசாக் தின செய்தியில் ஐ.நா. செயலாளர் நாயகம்

கொழும்பு, மே. 06

உலகளாவிய ரீதியில் பொதுமக்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருக்கும் தற்போதைய சூழ்நிலையில் கௌதம புத்தரின் போதனைகளான சகிப்புத்தன்மை, கருணை, மனிதாபிமானம் ஆகிய பண்புகளை பின்பற்றி நடப்பது இன்றியமையாததாகும் என்று ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் அன்ரோனியோ குட்டரெஸ் வலியுறுத்தியுள்ளார்.

வெசாக் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள விசேட செய்தியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

கௌதம புத்தரின் பிறப்பு மற்றும் பரிநிர்வாண மடைதலைக் குறிக்கும் வெசாக் பௌர்ணமி தினத்தை கொண்டாடும் அனைவருக்கும் வாழ்த்து தெரிவித்திருக்கும் அவர், இத்தினத்தை கொண்டாடுவதன் நோக்கத்துக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் இலக்குகளுக்கும் இடையில் மிக நெருங்கிய தொடர்பு காணப்படுவதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்களுக்கிடையிலான புரிந்துணர்வு, நிலையான அமைதி மற்றும் சமாதானத்தை கட்டியெழுப்புதல் என்பனவே அவையாகும் என்றும் அன்ரோனியோ குட்டரெஸ் தெரிவித்துள்ளார்.

உலகளாவிய ரீதியில் பொதுமக்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருக்கும் தற்போதைய சூழ்நிலையில் கௌதம புத்தரின் போதனைகளான சகிப்புத்தன்மை, கருணை, மனிதாபிமானம் ஆகியவற்றை பின்பற்றுவது இன்றியமையாததாகும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (அ)

## யாழ். சிறையிலிருந்து 14 கைதிகள் விடுதலை

யாழ்ப்பாணம், மே. 06

வெசாக் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருந்து நேற்று 14 கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

வெசாக் தினத்தை முன்னிட்டு நாடு பூராகவும் பொதுமன்னிப்பின் அடிப்படையில் சிறைச்சாலைகளில் இருந்து கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிறு குற்றச் செயல்களோடு தொடர்புள்ளோர் மற்றும் தண்டப்பணம் செலுத்தத் தவறி நீதிமன்ற உத்தரவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 14 ஆண் கைதிகள் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டனர். (அ-03)

# அறநெறிக் கல்வி கட்டாயம்

கொழும்பு, மே. 06

அறநெறி கல்வியை கட்டாயப்படுத்துவதற்கான அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக புத்தசாசன அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

எதிர்காலத்தில் அறநெறி பாடசாலைகளுக்கு செல்லாத மாணவர்கள் தொடர்பில் கணக்கெடுப்பு நடத்துமாறும் அவர் அதிகாரிகளை பணித்துள்ளார்.

அந்த மாணவர்களை அறநெறி பாடசாலைகளுக்கு அனுப்புவதற்கான வேலைத்திட்டத்தை முன்னெடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சமூகத்தில் ஏற்பட்டுள்ள பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு சிறந்த சமூகத்தை கட்டியெழுப்புவதே இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமாகும்.

இந்த வேலைத்திட்டங்களுக்கு அமைய, அறநெறி பாடசாலை ஆசிரியர்களின் அறிவை மேம்படுத்துவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட உள்ளதாக புத்தசாசன அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார். (அ)

## ஆண் குழந்தையின் சடலம் வத்தளையில் ஒதுங்கியது!

கொழும்பு, மே. 06

வத்தளை - பள்ளியாவத்தை, லன்சியாவத்தை முகத்துவாரத்திற்கு அருகில் ஆண் குழந்தையொன்றின் சடலம் கரையொதுங்கியுள்ளது.

குழந்தை இதுவரை அடையாளங்காணப்படவில்லை என பொலிஸார் கூறினர்.

குழந்தையின் சடலம் ராகம போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன், வத்தளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)

## சிறுமி சடலமாக மீட்பு!

கொழும்பு, மே. 06

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ட்ரூப் தோட்டத்தில் நேற்று மாலை 4 மணியளவில் தூக்கில் தொங்கிய நிலையில் சிறுமியின் சடலம் மீட்கப்பட்டது.

தரம் 8 இல் கல்வி கற்ற 13 வயது சிறுமியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார். இது தற்கொலையா அல்லது விபத்தா, கொலையா என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சம்பவம் நடைபெற்ற போது வீட்டில் ஒருவரும் இருக்கவில்லை என தெரிய வந்துள்ளது.

சிறுமியின் பெற்றோர் கொழும்பில் வேலைக்காக சென்றுள்ளதாகவும் தனது தாத்தா பாட்டியின் பாதுகாப்பிலேயே சிறுமியும் அவளது சகோதரனும் வாழ்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் வெசாக் தானம் வழங்கும் நிகழ்வு!



யாழ்ப்பாணம், மே. 06

வெசாக் பண்டிகையை முன்னிட்டு நாடு பூராகவும் தானம் வழங்கும் நிகழ்வு இடம் பெற்று வரும் நிலையில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் நேற்று தானம் வழங்கும் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாண பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ரொட்டி மற்றும் சவ்வரிசி கஞ்சி என்பன தானமாக வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பெருமளவு பொதுமக்கள் கலந்து கொண்டு தானம் பெற்றனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.05.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.